பக்கங்கள்: 12

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 கார்த்திகை 04 செவ்வாய்க்கிழமை 19.11.2024 கதிர் 012

### இனி இது ரகசியம் அல்ல!

இந்த நாடாளுமன்றத்தில் தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதிகளாக 45 பேர் இடம்பெற்றுள்ளனர். அதாவது வடக்கு கிழக்கு தமிழர்கள், மலையகத் தமிழர்கள் மற்றும் முஸ்லிம் 2

# ஊழலுக்கு எதிராகப் போராட்ட ஆளும்தரப்பு முழு அர்ப்பணம்

## சர்வதேச நாணய நிதியத்திடம் அநுர உறுதிமொழி

மக்கள் வழங்கிய ஆணையின் முக்கிய அம்சமான ஊழலுக்கு எதிரான போராட்டத்தில் தானும் தனது ஆளும்தரப்பினரும் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றனர் என்று அரசுத்தலைவர் அநுரகுமார திசநாயக்க தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்தினால் அமுல்படுத்தப்பட்டுள்ள வேலைத்திட்டத்தின் அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து கலந்துரையாடுவதற்காக, சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழு மற்றும் அதன் சிரேஷ்ட தூதுக்குழு தலைவர் பீட்டர் ப்ரூவர் ஆகியோர் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க மற்றும் புதிய அமைச்சர்கள் குழுவை நேற்றுப் பிற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் சந்தித்தனர். அப்போது அவர் இதனைத் தெரிவித்தார் என்று ஜனாதிபதி செயலகத்தின் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

அதன் அறிக்கையில் இந்தச் சந்திப்புத் தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, தனது ஆளும்தரப்புப் பெற்ற மக்கள் ஆணையுடன் இலங்கையின் பொருளாதாரத்தை மீட்டெடுப்பதன் மூலம் சர்வதேச நாணய நிதியத்துடன் (IMF) ஒத்துழைப்புடன் 7



## தோற்கடிக்கப்பட்ட 30 எம்.பிக்கள் வீடுகளில் இருந்து வெளியேற்றம்

பொதுத் தேர்தலில் தோல்வியடைந்த 30 நாடாளுமன்ற உறுப்பினர்கள் மடிவெல நாடாளுமன்ற உறுப்பினர்கள் குடியிருப்பில் இருந்து வெளியேறியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

தோற்கடிக்கப்பட்ட மேலும் 80 2

## கற்கோவளம் படை முகாமை அகற்றும் பணிகள் தொடக்கம்

பருத்தித்துறை கற்கோவளம் தரைப் படை முகாமை அகற்றும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. தனியாருக்குச் சொந்தமான காணிகளில் அமைக்கப்பட்டிருந்த இந்த முகாமை 14 நாட்களுக்குள் அகற்றி காணியை உரிமையாளரிடம் ஒப்படைக்குமாறு இராணுவ தலைமையகம் அறிவித்திருப்பதைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகப் படைத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

படையினரின் ஆக்கிரமிப்பில் இருந்த மூவருக்குச் சொந்தமான 3 ஏக்கர் காணியையே விடுவிக்க 7

# தமிழ் அரசு கட்சித் தலைமை சாணக்கியனுக்கு வேண்டும்

## கிழக்கிலிருந்து குரல்



(சகாதேவராஜா)

இதற்குப்பின்னரும் கட்சியின் தலைவர் மற்றும் செயலாளர் பதவிகளை வடக்கிலேயே வைத்துக்கொண்டிருப்பதை இனியும் எங்களால் ஏற்றுக்கொள்ள முடியாது. குறிப்பாக மிக அவசரமாக இலங்கை தமிழரசுக் கட்சி உயர்பீடம் கூடி தலைமைப் பதவியை சாணக்கியனுக்குத் தரவேண்டும். இல்லையேல் செயலாளர் பதவியையாவது தரவேண்டும்.

இவ்வாறு இலங்கை தமிழ் அரசுக் 2

## இந்தியா செல்கிறார் அரசுத் தலைவர்

அரசுத் தலைவர் அநுரகுமார திசநாயக்க உத்தியோகபூர்வ பயணமாக டிசெம்பர் மாதம் இந்தியா செல்லவுள்ளார் என்று அயலுறவுத்துறை அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

இந்தப் பயணத்தின்போது, அரசுத் தலைவர் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்து இருதரப்பு கலந்துரையாடல்களை நடத்த உள்ளார். அநுரகுமார அரசுத் தலைவராகப் பதவியேற்றுக் கொண்ட பின்னர் அவர் மேற்கொள்ளும் முதலாவது உத்தியோகபூர்வ வெளிநாட்டுப் 2

## ஆசிரியர் கைது

எல்பிட்டிய பிரதேசத்திலுள்ள பாடசாலையொன்றின் ஆசிரியர் கைது செய்யப்பட்டுள்ளார். அவர் மேலதிக வகுப்புக்குச் சென்ற இரு மாணவிகளை பாலியல் ரீதியில் துன்புறுத்தினார் என்ற குற்றச்சாட்டின் கீழ் நேற்று மாலை கைது செய்யப்பட்டார் என்று காலி மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் அலுவலகம் தெரிவித்தது.

கைது செய்யப்பட்ட ஆசிரியருக்கு வயது 54. சந்தேகமடைந்த ஆசிரியர் தனது பாடசாலையில் ஐந்தாம் வகுப்பு மாணவர்களுக்கு கூடுதல் கணித வகுப்பு நடத்தி வந்துள்ளார், அவர் இடைவேளையின் போது தம்மைப் பாலியல் ரீதியில் துன்புறுத்தினார் என்று 10 வயதுடைய இரண்டு மாணவிகள் தங்கள் 2



## ஒடுக்கப்பட்ட மக்களின் சுதந்திரத்திற்கான அழைப்பே இந்த பொதுத் தேர்தல் வெற்றி

### அமைச்சரவைப் பதவியேற்பில் அநுர உரை

இந்தத் தேர்தல் முடிவுகள் ஒடுக்கப்பட்ட மக்களின் சுதந்திரத்தின் அழைப்பாகும். அவர்கள் இந்த சுதந்திரத்தை எதிர்பார்த்தனர். இந்த பல்வேறு வழிகளிலுமான அடக்குமுறைகளில் இருந்து அவர்கள் விடுபட வேண்டும். இந்த தேர்தல் முடிவு சுதந்திரத்தின் அவசியத்தை எடுத்துரைக்கிறது என்றார் அரசுத் தலைவர் அநுரகுமார திசநாயக்க.

தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பின் புதிய அமைச்சரவை நேற்று முற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் பதவியேற்றனர். இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்க இதனைத் 7

## ரவியின் எம்.பி. பதவியில் தொடங்கியது பிரச்சினை

முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் 'சிலிண்டர்' சின்னத்தில் பொதுத் தேர்தலில் போட்டியிட்ட புதிய ஜனநாயக முன்னணியின் தேசியப் பட்டியல் மூலம் முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் பதவி வழங்கப்பட்டதற்கு ஐக்கிய தேசியக் கட்சி எதிர்ப்புத் 2

## அநுரவின் அமைச்சரவையில் முஸ்லிம்களுக்கு இடமில்லை

### வடக்கு கிழக்கு தமிழர்களும் இல்லை

அரசுத் தலைவர் அநுரகுமார திசநாயக்கவின் அமைச்சரவையில் முஸ்லிம்கள் எவரும் உள்ளடக்கப்படவில்லை. வடக்கு கிழக்கைச் சேர்ந்த தமிழர்களும் அமைச்சரவைக்குள் உள்வாங்கப்படவில்லை. எனினும் புதிய அமைச்சரவையில் தேசிய மக்கள் சக்தியைச் சேர்ந்த இரு மலையகத் தமிழர்கள் அமைச்சர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். ஏனைய 19 பேரும் சிங்களவர்களாவர்.

தேசியப் பட்டியல் மூலம் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி வழங்கப்பட்ட கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் சந்திரசேகரம் மற்றும் மாத்தறை மாவட்டத்தில் இருந்து நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவான சரோஜா ஆகிய மலையகத் தமிழர்கள் இருவருக்கு இந்த அமைச்சரவையில் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

புதிய அமைச்சரவையில் அதிக அமைச்சர்கள் மேல் மாகாணத்தைச் சேர்ந்தவர்கள். 6 பேர் இந்த மாகாணத்தைச் சேர்ந்தவர்கள். தென்கு, வடமேற்கு, சப்ரகமுவ மாகாணங்களுக்குத் தலா இரண்டு அமைச்சுப் பதவிகளும் வடமத்திய மற்றும் ஊவா 2

## இனி இது .....

பிரதிநிதிகள் நாடாளுமன்றம் சென்றுள்ளனர். தமிழர்களாக 27 பேரும் முஸ்லிம்களாக 19 பேரும் உள்ளனர் என்கின்றன தகவல்கள். ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப் பட்டியல் இன்னும் வெளியாகாத நிலையில் இந்த எண்ணிக்கை மேலும் ஒன்றிரண்டு அதிகரிக்கவும் வாய்ப்புக்கள் உள்ளன.

இந்தப் பொதுத் தேர்தலில் நாடு முழுவதும், வடக்கு கிழக்கு மேற்கு தெற்கு என்று இல்லாமல் அநுரவுக்கே ஆதரவு என்று கூறப்படுகின்றபோதும் நாடாளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள தமிழ், முஸ்லிம் பிரதிநிதிகள் அதிகளவில் எதிர்க் கட்சிகள் தரப்பிலிருந்தே தெரிவு செய்யப்பட்டுள்ளனர். தேர்தல் நாடு முழுவதும் ஒரே நிறத்தைத் தீட்டியிருந்தாலும் நாடாளுமன்றத்திற்குள் வடக்கு தெற்கு பிளவு ஆளும் மற்றும் எதிர்த் தரப்பாகத் தீர்க்கமாகவே இருப்பது கண்கூடு. அந்தப் பிளவும் இல்லாது போகும் நிலைமை ஒன்று ஏற்படும்போதே அரசுத் தலைவர் அநுர கூறுவதுபோன்ற ஓர் அரசியல் நிலை இங்கு ஏற்படுவதற்கான வாய்ப்பு ஏற்படும்.

நாடாளுமன்றத்தில் மட்டுமல்ல அமைச்சரவையிலும் பிளவு வெளிப்படையாகவே தெரிகிறது. இலங்கையின் முதலாவது பெரிய இனமும் கடைசிச் சிறிய இனமும் (மலையத் தமிழர்கள் தம்மைத் தனி இனமாக அடையாளப்படுத்த விரும்பும் நிலையில்) அமைச்சரவையில் உள்வாங்கப்பட்டுள்ள நிலையில் நடுவில் இருக்கும் 2ஆவது மற்றும் 3ஆவது இனங்களான ஈழத் தமிழர்களும் முஸ்லிம்களும் அமைச்சரவையில் உள்ளடக்கப்படவில்லை. அதேபோன்று போரால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மீது சிறப்புக் கவனம் செலுத்தும் விதத்தில் அநுரவும் நடந்துகொள்ளவில்லை என்பதும் கண்கூ-டு. போரால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வை மீளக் கட்டியெழுப்புவதற்கான அமைச்சோ வடக்கு கிழக்குப் பிரதிநிதிகளைக் கொண்ட அமைச்சரோ நியமிக்கப்படவில்லை என்பதே அதற்குச் சான்று. இந்தக் கவனக்குறைவும் புறக்கணிப்புமே கடந்த காலங்களிலும் இடம்பெற்றன, போருக்குக்கான காரணங்களில் ஒன்றாகவும் இருந்தன என்பதை மறக்கமுடியாது. புதிய ஆட்சியிலும் அது தொடர்வதற்கான அறிகுறிகளே தென்படுவது கவலை.

மேடைப் பேச்சுக்கும் முழக்கங்களுக்கும் அப்பால் செயல்களே உண்மையான நல்லிணக்கத்திற்கு வழிவகுக்கும். நிரந்தரமான அரசியல் தீர்வுக்கும் வழியேற்படுத்தும். சந்திரசேகரனுக்கு கடற்றொழில் அமைச்சு வழங்கப்பட்டுள்ளமை வடக்கின் பிரதிநிதித்துவம் என்று சப்பைக்கட்டுக் கட்டுவதெல்லாம் ஏற்றுக்கொள்ளப்படமுடியாதது. டக்ளஸ் தேவானந்தாவிற்கு வழங்கப்பட்டிருந்த அமைச்சை சந்திரசேகரனிற்கு வழங்கியிருப்பதனாலேயே அவர் வடக்கின் மக்களின் பிரதிநிதியாகவிடமாட்டார். அவரைத் தவிர்த்து வடக்கில் நேரடியாக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட 5 பிரதிநிதிகள் தேசிய மக்கள் சக்தியில் இருந்தபோதும் அவர்களுக்கு அமைச்சுப் பதவிகள் வழங்கப்படவில்லை. அவர்கள் கட்சிக்கும் அரசியலுக்கும் புதியவர்கள் என்று கூறிவிடமுடியாது. ஏனெனில் இம்முறை அமைச்சரவைப் பதவி வழங்கப்பட்டுள்ள அனைவருமே புதியவர்கள்தான். அவர்களில் பலரும் நாடாளுமன்றத்துக்குமே புதியவர்கள். அதுபோன்றே கிழக்கும் புறக்கணிக்கப்பட்டிருக்கின்றது. தேசிய மக்கள் சக்திக்கு கிழக்கிலும் தமிழ் பிரதிநிதிகள் இருக்கின்றபோதும் அவர்களுக்கும் அமைச்சுப் பதவிகள் கொடுக்கப்படவில்லை. பிரதி அமைச்சுப் பதவிகள் வழங்கப்படும் என்பதெல்லாம் வெறும் சமாளிப்பு வார்த்தைகளே! நீங்கள் யாரை எப்படி முதன்மைப்படுத்துகிறீர்கள் என்பதே உங்களின் அரசியல் செல்நெறி எப்படி இருக்கப்போகின்றது என்பதை வெளிப்படுத்தப் போதுமானது. அந்த வகையில் நம்பி வாக்களித்த வடக்கு கிழக்கு தமிழர்களின் நம்பிக்கையைத் தக்கவைப்பதற்கும் எஞ்சிய தமிழர்களின் மனங்களை வெல்வதற்கும் அநுரவின் ஆளும் தரப்பு தொடக்கத்திலேயே தவறிவிட்டது.

விரைவில் இந்தத் தவறு சரிசெய்யப்படாவிட்டால் வரலாறு திரும்பத் திரும்ப நிகழ்ந்துகொண்டே இருக்கும்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## தமிழ் அரசு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சியின் காரைதீவு பிரதேச கிளையின் தலைவரும் முன்னாள் தவிசாளருமான கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் வலியுறுத்தினார். காரைதீவில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசிய போது இதனை வலியுறுத்தினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அம்பாறை மாவட்டத்தில் இழந்த பிரதிநிதித்துவத்தை நாங்கள் மீண்டும் நிலைநாட்டியிருக்கின்றோம் . கிழக்கில் ஐந்து ஆசனங்கள் கிடைத்துள்ளன. அதாவது தமிழ் தேசியம் கிழக்கில்தான் வென்றுள்ளது. வடக்கில் கட்சி தோல்வி அடைந்தது என்று எமது ஊடகப் பேச்சாளர் சுமந்திரன் ஐயா கூறியிருந்தார். அது உண்மை.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியினுடைய தேசியப் பட்டியல் ஆசனத்தை நேற்று இடம்பெற்ற கட்சியின் அரசியல் குழுக் கூட்டத்தில் பொதுச் செயலாளர் சத்தியலிங்கம் ஐயாவுக்கு வழங்கி உள்ளார்கள். இது பொருத்தமானதாக இல்லை.

இந்த நாட்டில் பால்நிலை சமத்துவம் என்கின்ற அடிப்படையிலே பெண்களுக்கும் எமது கட்சியினல் ஓர் ஆசனம் வழங்கப்பட்டிருக்கவேண்டும். வடக்கு அல்லது கிழக்கில் ஒரு பெண்ணுக்கு அந்தத் தேசியப் பட்டியல் ஆசனத்தை வழங்கியிருக்கலாம்.

அநுரவின் ஆளும் தரப்பில் 18 பெண்களுக்கு பிரதிநிதித்துவம் கிடைத்துள்ளது. இன்று அமைச்சரவையில் பிரதமராக ஒரு பெண்ணும் மகளிர் சிறுவர் விவகார அமைச்சராக ஒரு தமிழ்ப் பெண்ணும் நியமிக்கப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த நாடாளுமன்றத் தேர்தலிலே ஒரு ஆசனம்தான் எங்களுக்குக் கிடைக்கப்பெற்றிருந்தது. ஏனைய கட்சிகள் மற்றைய ஆசனங்களை வென்றிருந்தன.

மட்டக்களப்பு மாவட்ட மக்களும் அங்கு துடிப்பாக வேலை செய்கின்ற இலங்கை தமிழரசுக் கட்சியின் சாணக்கியன் சகோதரரும் இம்முறை மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அமோக வெற்றியைத் தேடித் தந்திருக்கிறார்கள்.

இன்று மட்டக்களப்பு மாவட்டத்திலும் கிழக்கு மாகாணத்திலும் எங்களுடைய இலங்கை தமிழ் அரசுக் கட்சியே தமிழ்த் தேசியத்தை நிலைநாட்டிருக்கின்றது. கிழக்கு மக்கள் சரியான பாடத்தைக் கற்றுக்கொடுத்திருக்கிறார்கள். வடக்கு கிழக்கை சுத்தம் செய்திருக்கின்றார்கள்.

கடந்த காலங்களிலே ஆளும் தரப்போடு ஒட்டிக்கொண்டு தங்களுடைய வளர்ச்சியை மட்டும் கவனித்தவர்கள், ராஜாங்க அமைச்சர்கள் அமைச்சர்கள் என்று அனைவரையும் சுத்தம் செய்து தூசி தட்டி ஒரு தூய வடக்கு கிழக்கு பிரதேசமாக மாற்றி வைத்திருக்கின்றார்கள். எனவே நாம் இலங்கை தமிழரசுக் கட்சியை மேலும் வலுப்படுத்தப் பாடுபடவேண்டும்.

தலைமைகள் கடந்த காலங்களில் விட்ட பிழைகளுக்காக மக்கள் தகுந்த பாடத்தைக் கற்பித்துள்ளனர். மீண்டும் தவறான தெரிவுகள் இடம்பெறக்கூடாது. ஆகையால் இந்த தேசியப் பட்டியல் தெரிவு நிச்சயம் மாற்றப்படவேண்டும் - என்றார்.

## இந்தியா.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பயணமாக இது அமையும்.

இந்த பயணத்தில் அரசுத் தலைவர் இந்திய அரசின் பல முக்கிய தலைவர்களையும் அதிகாரிகளையும்கூடச் சந்தித்துப் பேச உள்ளார்.

புதிய அமைச்சரவையில் அயலுறுவுத்துறை அமைச்சராகப் பதவியேற்றுக்கொண்ட பின்னர் செய்தியாளர்களிடம் பேசும்போது அமைச்சர் விஜித ஹேரத் இதனைத் தெரிவித்தார்.

## ஆசிரியர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெற்றோரிடம் தெரிவித்ததை அடுத்து அவர்கள் பொலிஸாரிடம் முறையிட்டனர்.

முறைப்பாட்டின் அடிப்படையில் ஆசிரியர் கைது செய்யப்பட்டார். இரண்டு சிறுமிகளும் சட்ட வைத்திய அதிகாரியிடம் பாரப்படுத்தப்பட்டுள்ளனர். சந்தேகநபர் இன்று நீதிமன்றத்தில் முற்படுத்தப்படுவார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

# டக்ளஸின் நம்பிக்கை

தேர்தல் முடிவுகளை சவாலாக ஏற்று முன்னோக்கிச் செல்வோம் என ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் உறுப்பினர்களுக்கு செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா நம்பிக்கை தெரிவித்தார்.

நடந்து முடிந்த தேர்தல் முடிவுகள் ஈ.பி.டி.பி. கட்சியின் அடுத்த கட்ட நகர்விற்கு சிறந்த வலுவூட்டலை தந்துள்ளது எனத் தெரிவித்த அவர் தேசிய நல்லிணக்கம் குறித்த தெளிவூட்டல் மக்களுக்கு சரிவர வழங்கப்படாமையும், தமது கட்சிக்கு எதிராகத் திட்டமிட்டுப் பரப்பட்ட அவதூறுகளுமே பின்னடைவிற்குக் காரணம் என்றார்.

இந்த தேர்தலில் ஏற்பட்ட பின்னடைவிற்கான காரணங்களை கட்சி செயற்பாட்டாளர்கள் ஒவ்வொருவரும் சுயவிமர்சனம் செய்துதிருத்திக் கொள்வதன் மூலம் எதிர்காலத்தை நோக்கி இன்னமும் வலிமையுடன் பயணிக்க தயாராக வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

ஈ.பி.டி.பி. கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் செயற்பாட்டாளர்களுடன், கட்சியின் யாழ் தலைமை அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலில் அவர் இதனைத் தெரிவித்தார். ஏனைய மவட்டங்களைச் சேர்ந்த கட்சிப் பிரதிநிதிகளும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டிருந்த நிலையில், மன வலிமையோடு தமக்கு வாக்களித்த மக்களுக்கும் வாக்களிக்க நினைத்திருந்த மக்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறார் எனவும் தெரிவித்துள்ளார்

தேர்தலுக்கு முன்னர் ஈ.பி.டி.பி. க்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட பரப்புரைகளுக்கு அப்பால், தேர்தலுக்கு பின்னரும் வெளியாகின்ற காழ்ப்புணர்வு மற்றும் போலிப் பரப்புரைகள் குறித்த உண்மைகளை, நாடளாவிய ரீதியில் தெளிபடுத்த வேண்டிய கட்டாயக் கடமை கட்சியின் செயற்பாட்டாளர்களுக்கு இருப்பதாகவும் வலியுறுத்தினார்.

"அலைகள் அடித்தாலும், கார்முகில்கள் சூழ்ந்தாலும் எமது கடும் பயணம் ஒருபோதும் நிற்பதில்லை. எந்தப் பின்னடைவுகளும் ஓரடி பின்னால் ஈரடி முன்னால் என்றே இருக்கும்" என்றார்.

# ஜெய்சங்கர் வாழ்த்து

விஜித ஹேரத், இலங்கையின் அயலுறவுத்துறை அமைச்சராக மீண்டும் தெரிவானமைக்கு இந்திய அயலுறவுத்துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் வாழ்த்துக் கூறியுள்ளார். அவர் தமது எக்ஸ் தளத்தில் இந்த வாழ்த்தினை தெரிவித்துள்ளார்.

இலங்கை வெளிவிகார அமைச்சருடன் இணைந்து பணியாற்றவும், முக்கிய விடயங்களில் ஆதரவு வழங்கத் தயாராகவிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான பங்காளித்துவத்தை மேலும் வலுப்படுத்த இணைந்து செயற்படத் தயாராக உள்ளதாகவும் அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள விஜித ஹேரத் நேற்று உடனடியாகவே தனது கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்.

## ரவியின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளது.

2024 பொதுத் தேர்தலில் புதிய ஜனநாயக முன்னணிக்கு 3 ஆசனங்கள் கிடைத்தன. தேசியப் பட்டியல் மூலம் மேலும் 2 ஆசனங்கள் கிடைத்தன. அந்த இரு இடங்களுக்கும் முன்னாள் பிரதமர் தினேஸ் குணவர்த்தன மற்றும் ரவி கருணாநாயக்க ஆகியோர் நியமிக்கப்படவுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. அதன்படி கட்சியின் செயலாளரால் ரவி கருணாநாயக்கவின் பெயர் தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு அறிவிக்கப்பட்டு, தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக அவரது பெயர் வர்த்தமானியில் நேற்று வெளியிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில், ஐக்கிய தேசியக் கட்சிக்கு தெரியாமல் புதிய ஜனநாயக முன்னணியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்கு ரவி கருணாநாயக்கவிற்கு அனுப்பப்பட்டுள்ளது என்று கட்சித் தவிசாளர் வஜிர அபேவர்த்தன தெரிவித்தார். முன்னணியில் உள்ள தலைவர்கள் கூடி இந்த விடயம் குறித்து இன்று கலந்துரையாடுவார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

பொதுத் தேர்தலில் 'சிலிண்டர்' சின்னத்தில் போட்டியிட்ட புதிய ஜனநாயக முன்னணியின் அனைத்துக் கட்சிகளின் பிரதிநிதிகளின் பங்கேற்புடன் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளதாகவும் வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

கொழும்பு மால் வீதியில் அமைந்துள்ள புதிய ஜனநாயக முன்னணியின் அலுவலகத்தில் நேற்றுச் செய்தியாளர்களைச் சந்தித்தபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

குறித்த தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்கு செல்வி தலதா அத்துகோரள அல்லது சட்டத்தரணி ரொனால்ட் பெரேராவை முன்னிறுத்த வேண்டுமென தமது தரப்பு விரும்புகின்றது என்றும் வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்கு ரவி கருணாநாயக்கவை தன்னிச்சையாக நியமிப்பதற்கான கட்சிச் செயலாளரின் தீர்மானம் கட்சி யாப்பின் 3(3), 3(4), 9(7), 13(7), 13(8) ஆகிய சரத்துக்களை மீறுவதாகவும் வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.

## அநுரவின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாகாணங்களுக்கு தலா ஒரு அமைச்சுப் பதவியும் வழங்கப்பட்டுள்ளன.

தேசியப் பட்டியலிலிருந்து நியமிக்கப்பட்ட சந்திரசேகரனுக்குக் கொடுக்கப்பட்ட அமைச்சுப் பதவியை வடமாகாணத்திற்காகக் கொடுக்கப்பட்ட பதவியாகவே கொள்ளவேண்டும் என்று கொழும்பில் உள்ள அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர். ஆனால், மலையகப் பின்புலத்தைச் சேர்ந்த ஒருவருக்கு கடல்சார் அமைச்சு வழங்கப்பட்டிருப்பது வடக்கில் விமர்சனங்களுக்கு உள்ளாகி வருகின்றது. எனினும் சந்திரசேகரன் நீண்டகாலமாக வடமாகாணத்தில் கட்சியை ஒழுங்கமைத்து வருவதால் அவருக்கு இந்த அமைச்சுப் பதவி வழங்கப்பட்டதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

கிழக்கு மாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் அமைச்சரவை நியமனங்கள் எவையும் வழங்கப்படவில்லை. எதிர்காலத்தில் பிரதி அமைச்சர்களை நியமித்து அந்த வெற்றிடத்தை நிரப்புவோம் என்று தேசிய மக்கள் சக்தி சார்பில் கூறப்படுகின்றது.

## தோற்கடிக்கப்பட்ட ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்ற உறுப்பினர்கள் அங்கிருந்து வெளியேறவேண்டி இருக்கின்றது. அவர்களும் வெளியேறிய பின்னர் அந்த வீடுகள் புதிய உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்படும் என்று நாடாளுமன்ற அதிகாரிகள் தெரிவித்தனர்.

தேர்தலில் தோல்வியடைந்த 110 முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மடிவெல குடியிருப்பில் தங்கியிருந்தனர். அவர்களில் 30 பேரே அங்கிருந்து வெளியேறியுள்ளனர். நாடாளுமன்றம் கலைக்கப்பட்டபோதும் தேர்தல் நடைபெறும் நாள் வரையில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அங்கு தங்கியிருக்க அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

புதிதாக தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மடிவெல குடியிருப்பில் இருந்து வீடுகள் வழங்கப்பட வேண்டியிருப்பதால், அவற்றைத் திருத்தும் பணிகளை ஆரம்பித்துள்ளதாக நாடாளுமன்ற அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

காலைக்கதிர் Kalaikkathir

# தேர்தல் காலங்களில் பணமும் பொதியும் வழங்கும் பண்பாட்டை ஒழிக்கவேண்டும்

## உதுமாலெவ்வை தெரிவிப்பு



(எம்.ஏ.றமீஸ்)

தேர்தல் காலங்களில் மக்களுக்கு பணத்தையும் பொதிகளையும் வழங்கி தமக்கான வாக்குகளை வற்புறுத்தலின் கீழ் பெற்றுக் கொள்கின்ற கலாசாரம் இனிவரும் காலங்களில் மாற்றியமைக்கப்பட வேண்டும். அவ்வாறு செயற்பட்டவர்கள் எமது மாவட்ட மக்களால் இம்முறை நிராகரிக்கப்பட்டுள்ளனர். அது மாத்திரமன்றி எமது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியினை இத்தேர்தலில் தோல்வியடையச் செய்ய வேண்டும் என கட்சிக்குள்ளும் கட்சிக்கு வெளியேயும் இருந்து செயற்பட்டவர்களும் இத் தேர்தலில் தோல்வியடைந்துள்ளனர் எனதிகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியில் போட்டியிட்டு அக்கட்சியின் மூலம் இம்மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட ஒரே ஒரு நாடாளுமன்ற உறுப்பினரான எம்.எஸ். உதுமாலெவ்வை தெரிவித்தார்.

தேர்தல் வெற்றியின் பின்னர் ஏற்பாடு செய்யப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பு ஞாயிற்றுக் கிழமை மாலை அட்டாளைச்சேனையில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது தொடர்ந்தும் அவர் கருத்துத் தெரிவிக்கையில் -

இம்முறை நடைபெற்ற பொதுத் தேர்தலின்போது பலர் தமது பண பலத்துடன் அம்பாறை மாவட்டத்தில் போட்டியிட்டனர். அவர்களுள் பெரும்பாலானோர் தமது வெற்றிக்காக பெருந்தொகை பணத்தையும், பல்வேறு பொருள்கள் அடங்கிய பொதிகளையும் மக்களுக்காக வழங்க முற்பட்டனர். அவ்வாறு செயற்பட்டவர்களுக்கு இம்மாவட்ட மக்கள் தக்க பாடம் புகட்டியிருக்கின்றார்கள். அவர்களில் எவருமே இத்தேர்தலில் வெற்றி பெறவில்லை.

எமது கட்சியையும், கட்சித் தலைமையையும் தோல்வியடையச் செய்ய வேண்டும் என கட்சிக்குள்ளிருந்தும், கட்சிக்கு வெளியில் இருந்தும் பலர் செயற்பட்டனர். அவர்களது கனவு இத்தேர்தலில் பலிக்கவில்லை. மறைந்த பெருந்தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரஃப் இக்கட்சியை ஆரம்பித்தபோது இக்கட்சியில் நாம் இணைந்து செயற்பட்டவர்கள். கட்சிக்காக பல்வேறு தியாகங்களை நாம் மேற்கொண்டிருக்கின்றோம். எமது தூய எண்ணத்திற்கும், எமது தியாகத்திற்கும் கிடைத்த வெற்றியாகவே நாம் இவ்வெற்றியனை பார்க்கின்றோம்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் உறுப்பினராக இருந்தால் அவர் கட்சிக்கும் சமூகத்திற்கும் விஸ்வாசம் உடையவராக இருக்க வேண்டும். கட்சிக்கும் சமூகத்திற்கும் புறம்பாக செயற்பட்டவர்களையும், ஜனாஸா எரிப்பின்போது சுயநலத்திற்காக செயற்பட்டவர்களையும் இத்தேர்தலின்போது மக்கள் பாடம் புகட்டி நிராகரித்துள்ளனர்.

தற்போது கிடைக்கப் பெற்ற எனது நாடாளுமன்ற பிரதிநிதித்துவம் மூலம் எதிர்வரும் ஐந்தாண்டுகளுக்கு இன மத பேதமின்றி செயற்பட எண்ணியுள்ளேன். நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம் இன்றி காணப்படும் பிரதேசங்களுக்கு மிகுந்த கரிசனையுடன் எனது சேவையை மேற்கொள்ளவுள்ளேன். எமது கட்சியில் இருந்து பிரிந்து சென்றவர்களும், கருத்து முரண்பாடுகளுடன் கட்சியை விட்டு தூரமானவர்களும், ஏனைய கட்சியைச் சேர்ந்தவர்களும் ஒற்றுமைப்பட்டு எமது சமூகத்தின் நலனுக்காக செயற்பட வேண்டியுள்ளது. அதற்காக அனைவரும் ஒன்றுபட்டு முஸ்லிம்களின் பாரிய சக்தியாக குரல் கொடுக்க முஸ்லிம் காங்கிரஸ் கட்சியை பலப்படுத்த வேண்டியிருக்கின்றது.

அம்பாறை மாவட்டத்தினைப் பொறுத்தவரையில் மூவின சமூகத்தவர்களும் செறிந்து வாழும் பகுதியாகும். இங்குள்ள ஒவ்வொரு சமூகத்தினருக்கும் பல்வேறான பிரச்சினைகள் காணப்படுகின்றன. அவ்வாறான பிரச்சினைகளை பேச்சின் அடிப்படையில் தீர்த்து வைக்க முன்னின்று செயற்பட வேண்டும். எம்மிடையே உள்ள முரண்பாடுகள் களையப்பட்டு நிரந்தர தீர்வை ஒற்றுமையோடு பெற்றுக் கொள்ளக் கூடியவர்களாக நாம் அனைவரும் மாற வேண்டும்.

இத்தேர்தலில் என்னை வேட்பாளராக களமிறக்கிய கட்சிக்கும், கட்சியின் தலைமை உள்ளிட்ட கட்சியின் அனைத்து தரப்பினருக்கும், கட்சியின் போராளிகள், பொதுமக்கள், நலன்விரும்பிகள் அனைவருக்கும் இதய சுத்தியுடனான நன்றியறிதலை தெரிவித்துக் கொள்கின்றேன். - என்றார்.

## தேசிய மக்கள் சக்தியின் தேசிய பட்டியலில் தெரிவான ஆசிரியர் ஆதம்பாவாவுக்கு சாய்ந்தமருதில் வரவேற்பு

(சகாதேவராஜா)

தேசிய மக்கள் சக்தியின் தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக கல்முனை சாய்ந்தமருதைச் சேர்ந்த பட்டதாரி ஆசிரியர் அபூபக்கர் ஆதம்பாவா தெரிவு செய்யப்பட்டிருக்கின்றார் .

அவருக்கு, அவர் பிறந்த சாய்ந்தமருதில் ஞாயிற்றுக்கிழமை இரவு பெருவரவேற்பளிக்கப்பட்டது.

தேசிய மக்கள் சக்தி தேசிய பட்டியலில் பட்டியலில் இடம் பிடித்த ஒரே ஒரு முஸ்லிம் வேட்பாளர் ஆதம்பாவா ஆசிரியர் என்பது குறிப்பிடத்தக்கது .

இவரது தெரிவுடன் அம்பாறை மாவட்டத்தில் 3 முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவாகி இருக்கின்றார்கள்.

இம்முறை தேர்தலில் போட்டியிட்டு 23075 வாக்குகளை பெற்று ஏழாவது நிலையில் நாடாளுமன்ற வாய்ப்பை தவற விட்டார். இருந்த போதிலும் அவருக்கு தேசிய பட்டியல் ஆசனத்தை அனுர அரசு கட்சி வழங்கியுள்ளது.

கல்முனை கார்மேல் பற்றிமா தேசிய பாடசாலையில் உயிரியல் பட்டதாரி ஆசிரியராக பணியாற்றி வந்தவர். சாய்ந்தமருதைச் சேர்ந்த ஆதம்பாவா சம்மாந்துறையில் திருமணம் முடித்தவர்.

இவர் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் வர்த்தக முகாமைத்துவ பீடத்தின் சிரேஸ்ட விரிவுரையாளர் பேராசிரியர் எம்.ஏ.சி.சுலைஹா பீபீயை திருமணம் முடித்தவர் . இவருக்கு மூன்று பிள்ளைகள் .

மூத்தவர் காலிஸ். இவர் மொரட்டுவ பல்கலைக்கழகத்தில் நான்காமாண்டு மருத்துவ பீட மாணவனாக இருக்கின்றார்.

இரண்டாவது பிள்ளை ஹலீசா ஷெயினப் . இவர் கொழும்பு பல்கலைக்கழகத்தில் மருத்துவ பீட மாணவியாக இருக்கின்றார்.

மூன்றாம் பிள்ளை .ஹம்னா சரசீஸ் மகுமூத் மகளிர் கல்லூரியில் உயர்தர கலைப்பிரிவில் பயின்று கொண்டிருக்கின்றார் .

ஜனாப் ஆதம்பாவா கல்முனை சாஹிறா கல்லூரியில் கல்வி பயின்றவர். பல்கலைக்கழகம் சென்று 1998 இல்

விஞ்ஞான பட்டதாரியாக மற்றும் விஞ்ஞான முதுமாணி பட்டதாரி ஆக பல பட்டங்களை பெற்றவர்.

1997 களில் ஆதம்பாவா பட்டம் பெற்ற பின்பு வேலையற்ற பட்டதாரிகளின் போராட்டத்தை பல மாதங்களாக முன்னெடுத்தவர். காரைதீவு முச்சந்தியில் இரவு பகலாக இருந்து பல நூறு பட்டதாரிகளை இணைத்து தலைமை தாங்கி வழி நடத்தி போராடி வெற்றி பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தினால் அக்கராயனில் மரக்கன்றுகள் வழங்கல்







தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் வடமாகாண மரநடுகை மாதத்தை முன்னிட்டுக் கிளிநொச்சியில் அக்கராயன் கரித்தாஸ் குடியிருப்புக்கு மரக்கன்றுகளை வழங்கியுள்ளது.

வடக்கு மாகாணசபை 2014 ஆம் ஆண்டு கார்த்திகை மாதத்தை வடமாகாண மரநடுகை மாதமாகப் பிரகடனப்படுத்தியிருந்தது. இதனை ஆண்டுதோறும் தவறாது கடைப்பிடித்து வரும் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் இக்காலப்பகுதியில் பொதுமக்களுக்கும், பொது அமைப்புகளுக்கும் மரக்கன்றுகளை இலவசமாக வழங்கிவருவதோடு, மரக்கன்றுகளை நடுகை செய்தும் வருகிறது.

இதன் தொடர்ச்சியாகவே ஞாயிற்றுக்கிழமை அக்கராயனில் கரித்தாஸ் குடியிருப்பு மக்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க அனைத்துக்

குடும்பங்களுக்கும் மாமரக்கன்றுகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் இணைப்பாளர் உ.நிறோஜன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன், சூழல் பாதுகாப்பு அணியின் துணைச் செயலாளர் த. யுகேஸ் ஆகியோர் கலந்துகொண்டு மரக்கன்றுகளை வழங்கிவைத்தனர்.

## மாணவியின் இறப்பு தொடர்பில் பாடசாலை ஆசிரியர்கள கைது

(சியாஜ்)

வென்னப்புவ பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில் இரு ஆசிரியைகளால் தாக்கப்பட்டமையால் பாதிக்கப்பட்டதாகக் கூறப்படும் பாடசாலை மாணவி ஒருவர் மூன்று மாதங்களுக்கு மேலாக வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் உயிரிழந்தார்.

இதன்படி, சம்பவம் தொடர்பில் பிணையில் விடுவிக்கப்பட்ட 2 ஆசிரியைகளும் மீண்டும் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டதையடுத்து அவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

வென்னப்புவ பகுதியிலுள்ள பாடசாலையொன்றில் 10 ஆம் தரத்தில் கல்வி கற்றுவந்த குறித்த மாணவி, வகுப்பு ஆசிரியை மற்றும் மற்றுமொரு ஆசிரியையால் தாக்கப்பட்டதையடுத்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

வகுப்பறையை விட்டு வேறொரு மாணவியுடன் வெளியேறியமை தொடர்பில் அவர் இவ்வாறு தண்டிக்கப்பட்டதாகத் தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பான விசாரணைகளின் பின்னர், சந்தேக நபர்களான ஆசிரியைகள் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுக் கடந்த செப்ரெம்பர் 13 ஆம் திகதி பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

இந்த நிலையில், ராகம வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த குறித்த மாணவி சிகிச்சை பலனின்றி அண்மையில் உயிரிழந்தார்.

இதையடுத்து, இரண்டு ஆசிரியைகளும் மீண்டும் கைது செய்யப்பட்டனர்.

காலைக்கதிர்
Kalaikkathir

## நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# புலிகள் மீதான தடையை நீக்குமா அநுர அரசு?

பொதுத் தேர்தலுக்குப் பின்னர் புதிய அமைச்சரவை பதவியேற்றுள்ளது. மூன்றில்இரண்டுபெரும்பான்மைப்பலத்துடன் உறுதியான ஆளும் தரப்பாக அநுரகுமார திசநாயக்கவின் ஆளும் தரப்புப் பயணிக்கவுள்ளது. விரைவில் அது தனது முழு வீச்சுடன் பணிகளைத் தொடங்கும் என்று எதிர்பார்க்கலாம். இந்த நிலையில் இன்னும் இரண்டே நாள்களில் வடக்கு கிழக்கில் மாவீரர் வாரம் தொடங்கவுள்ளது. அநுர ஆட்சியில் மாவீரர்களை நினைவேந்துவதற்கான வாய்ப்புகள் தங்கு தடையின்றிக் கிடைக்குமா இல்லையா என்கிற சந்தேகத்துடனேயே மாவீரர் தினத்திற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

கடந்த காலங்களில் மாவீரர் வாரங்களையும் மாவீரர் நாள்களையும் நினைவேந்துவதற்கு தமிழ் மக்கள் பெரும் இன்னல்களையும்துன்பங்களையும்தாங்கவேண்டியவர்களாக இருந்தார்கள். இந்த இறுக்கத்தில் 2015 சிறிய தளர்வு ஏற்பட்டது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினதும் பக்க பலத்துடன் அதிகாரத்திற்கு வந்த மைத்திரி – ரணில் கூட்டு ஆளும் தரப்புக் காரணமாக இந்தத் தளர்வு ஏற்பட்டது. இருந்தாலும் பல சமயங்களில் காவல்துறையினரால் வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. மாவீரர் தின நிகழ்வுகளைத் தடுப்பதற்காகவும், நிகழ்வுகளை நடத்தியவர்களுக்கு எதிராகவும் வழக்குகள் பதியப்பட்டன. இம்முறையும் அப்படி நடக்குமா என்கிற சந்தேகம் நீடிக்கின்றது.

இந்தச் சந்தேகத்திற்குக் காரணம், விடுதலைப் புலிகள் அமைப்பு இலங்கை அரசின் தடைசெய்யப்பட்ட அமைப்புக்களின் பட்டியலில் இடம்பெற்றிருப்பதுதான். தடை செய்யப்பட்ட அமைப்பு ஒன்றின் பிரதிநிதிகளை நினைவேந்துகிறார்கள் என்கிற ரீதியில்தான் காவல்துறையினர் வழக்குகளைத் தாக்கல் செய்கிறார்கள். அதனால் ஆளும் தரப்பின் கொள்கை எதுவாக இருப்பினும் அதற்கு அடங்காத, எதிர்த்தரப்பு விசுவாசிகளான கால்துறை அதிகாரிகள் சட்டத்தைக் காரணம்காட்டி இப்படி வழக்குகளை நீதிமன்றங்களில் தாக்கல் செய்து மக்களை அவதிக்குள்ளாக்குவதைத் தடுக்க முடியாது.

இதற்கான ஒரே நிரந்தரத் தீர்வு விடுதலைப் புலிகள் அமைப்பு மீதான அரச தடையை நீக்குவதுதான். புலிகள் அமைப்பு கடந்த 10 வருடங்களில் இலங்கைக்கு அச்சுறுத்தல் தரக்கூடிய எந்தவொரு நடவடிக்கைகளிலும் ஈடுபடவில்லை. புலம்பெயர் நாடுகளில் உள்ள தமிழர்கள் சிலரின் செயற்பாடுகளைக் காரணங்காட்டி விடுதலைப் புலிகளின் பிரிவினைவாதம் இன்னும் உயிர்ப்போடு இருப்பாத உளவு அமைப்புக்கள் தரும் அறிக்கைகளின் அடிப்படையில் இந்தத் தடை தொடர்ந்து நீக்கப்படாமலேயே இருக்கின்றன.

இந்த நிலமை தேசிய மக்கள் சக்தியின் நிறுவன அமைப்பான ஜேவிபிக்குப் புரியாதது அல்ல. அதுவும் இலங்கையில் ஆட்சியைக் கைப்பற்றுவதற்காக இருண்டு தடவைகள் ஆயுதக் கிளர்ச்சியில் ஈடுபட்ட அமைப்புத்தான். அதன் காரணமாக அரச பயங்கரவாதத்திற்கும் அரச தடைகளுக்கும் முகம் கொடுத்த அமைப்புத்தான். இருந்தாலும் அந்த அமைப்பு சிங்களவர்களாக இருந்த காரணத்தால் விரைவிலேயே மன்னிப்புப் பெற்று அரசியலுக்குள் நுழையும் வாய்ப்பைப் பெற்றது. இலகுவானதாக இல்லாவிடினும் ஜேவிபியால் அந்த வாய்ப்பைப் பெற முடிந்தது. ஆனால், தமிழர்கள் என்ற காரணத்தாலேயே விடுதலைப் புலிகள் அமைப்புக்கு அந்த வாய்ப்பு மறுக்கப்பட்டுவருவது நியாயமானதல்ல.

விடுதலைப்புலிகளின்ஆயுதப்பலம்முற்றாகஅழிக்கப்பட்டுள்ளது. போர் முடிவதற்கு முன்பாகவே தமது ஆயுதங்களை மௌனிக்கின்றோம் என்று அவர்களே அறிவித்துவிட்டார்கள். அந்தஅமைப்பின்உயர்தலைமைகளும்போராட்டக்களத்திலிருந்து முற்றிலுமாக அகற்றப்பட்டுவிட்டார்கள். இந்த நிலையில் அந்த அமைப்பால் இலங்கைக்கு அச்சுறுத்தல் என்று கூறுவது ஏற்புடையது அல்ல. அதன் மீதான தடையை நீக்குவதே, தமது மக்களின் விடுதலைக்காகப் போராடி மடிந்தவர்களை நினைவுகூர்வதற்கான சுதந்திரத்தை தமிழர்களுக்கு வழங்கும். ஜேவிபிக்கு அந்த உரிமை கிடைத்துள்ளபோது, அதன் பின்னர் 30 வருடங்களில் ஆட்சியி–ம் கிடைத்துள்ளபோது அதே உரிமையை புலிகளுக்கும் வழங்க அநுர ஆட்சி முன்வருமா? புலிகள் மீதான தடையை நீக்குமா?

# ஹாட்லி மைந்தர்களின் 25ஆவது நினைவேந்தல்

## உணர்வுபூர்வமாக கடைப்பிடிப்பு

ஹாட்லியின் மைந்தர்களது 25 ஆம் ஆண்டு நினைவுநாள் வடமராட்சி இன்பர்சிட்டி கடற்கரையில் அவர்களது குடும்பத்தவர் மற்றும் நண்பர்களால் நேற்று ஞாயிற்றுக்கிழமை உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கபட்டது.

கல்விச் செயற்பாட்டின் நிமித்தம் வடமராட்சி இன்பர்சிட்டிகடற்பகுதியில்1999ஆம்ஆண்டுநவம்பர் 17, கடல்வள ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தவேளை கடல் அலையில் சிக்குண்டு உயிரிழந்திருந்த யாழ். ஹாட்லி கல்லூரியின் 2000 ஆம் ஆண்டு உயர்தர வகுப்பு மாணவர்களான கந்தர்வன், இரவிசங்கர், சிவோத்தமன் மற்றும் பிரதீபன் ஆகிய நான்கு பேரின் 25 ஆவது ஆண்டு நினைவேந்தலும், மற்றும் பேராதனை பல்கலைக் கழகத்தில் பொறியியல் பீட மாணவனாக கல்வி கற்றுவந்தவேளை தொடருந்து விபத்தில் சிக்கி உயிரிழந்த குணரட்ணத்தின் 20 ஆவது ஆண்டு நினைவேந்தலும் ஒன்றாக இடம்பெற்றன.

இன்பர்சிட்டி வெள்ளை வான் கடற்கரைக்கு அண்மித்த பகுதியில் உயிரிழந்த மாணவர்களது திருவுருவப்படம் வைக்கப்பட்டு அவர்களுக்கு விருப்பமான உணவுகள், சிற்றுண்டி வகைகள் படையலிடப்பட்டு மாலை அணிவிக்கப்பட்டு மலர்தூவி உணர்வுபூர்வமான முறையில் அஞ்சலி செலுத்தப்பட்டது. உயிரிழந்த மாணவர்களது குடும்பத்தினர், உறவினர்கள், நண்பர்கள் மற்றும் ஹாட்லிக் கல்லூரி அதிபர் கலைச்செல்வன் உள்ளிட்ட பலர் பங்கேற்று அஞ்சலி செலுத்தினர்.

# ஹாட்லியின் மைந்தர்களின் நினைவாக குருதிக்கொடை

ஹாட்லியின் மைந்தர்களது நினைவாக கல்லூரி மைந்தர்கள் நிதியத்தின் ஏற்பாட்டில், பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை குருதி வங்கிப் பிரிவினரது அனுசரணையில் குருதிக்கொடை முகாம் நேற்று நடந்தது.

கல்விச் செயற்பாட்டின் நிமித்தம் வடமராட்சி இன்பர்சிட்டி கடற் பகுதியில் 1999ஆம் ஆண்டு நவம்பர் 17 ஆம் திகதி, கடல்வள ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தவேளை கடல் அலையில் சிக்குண்டு உயிரிழந்திருந்த யாழ். ஹாட்லி கல்லூரியின் 2000 ஆம் ஆண்டு உயர்தர வகுப்பு மாணவர்கள் நான்கு பேரின் 25 ஆவது ஆண்டு, மற்றும் பேராதனை பல்கலைக் கழகத்தில் பொறியியல் பீட மாணவனாக கல்வி கற்றுவந்த வேளை தொடருந்து விபத்தில் சிக்கி உயிரிழந்த மாணவனது 20ஆவது ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு இந்தக் குருதிக்கொடை முகாம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

நேற்றுக் காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகி மதியம் 2.00 மணிவரை ஹாட்லிக் கல்லூரியின் மண்டபத்தில் இடம்பெற்ற இந்த முகாமில் கல்லூரி மாணவர்கள், பழைய மாணவர்கள் உள்ளிட்ட தன்னார்வ குருதிக் கொடையாளர்கள் பங்கேற்று குருதிக்கொடை வழங்கினர்.

# ஒருமாத ஆண் குழந்தை சளி காரணமாக இறப்பு

சளிகாரணமாகவைத்தியசாலையில்சேர்க்கப்பட்ட ஒரு மாத ஆண் குழந்தை ஒன்று சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளது.

வரணி வடக்கு, வரணியைச் சேர்ந்த வேணுதன் பிரித்தி என்ற குழந்தையே உயிரிழந்துள்ளது என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

பிறந்த 31ஆம்நாளான நவம்பர் 16 குழந்தையைக் குளிப்பாட்டிய நிலையில் மறுநாள் குழந்தைக்கு சளி பிடித்துள்ளது. பிற்பகல் 3.00 மணியளவில் பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் பெற்றோர் குழந்தையைச் சேர்த்தனர்.

குழந்தை மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டது. அன்று நள்ளிரவே குழந்தை சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளது.

இந்த இறப்பு தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணை மேற்கொண்டார். சாட்சிகளை கொடிகாமம் பொலிசார் நெறிப்படுத்தினர்.

# யானை தாக்கிக் காயமடைந்த 3 பிள்ளைகளின் தந்தை இறப்பு

யானை தாக்கியதில் படுகாயங்களுக்கு உள்ளான மூன்று பிள்ளைகளின் தந்தை ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

சிவநகர் ஒட்டிசுட்டான் பகுதியைச் சேர்ந்த இரத்தினசிங்கம் மகேந்திரராஜாவே (வயது-61) உயிரிழந்தார் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

நவம்பர் 8 அன்று மழை பெய்து கொண்டிருந்தபோது துவிச்சக்கர வண்டியில் குடை பிடித்த வண்ணம் அவர் வயலுக்கு சென்றபோது யானை அவரைத் தாக்கியுள்ளது. காலை ஆறு முப்பது மணியளவில் இத்திநாடு பகுதியில் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

காயமடைந்த நிலைல் வீதியில் கிடந்தவரை அவ்வழியாகச் சென்றவர்கள் பார்த்துக் குடும்பத் தினருக்குத் தகவல் தெரிவித்தனர். உடனடியாக ஒட்டுசுட்டான் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட அவர், அங்கிருந்து மாஞ்சோலை வைத்தியசாலைக்கும் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

தொடர்ந்து சிகிச்சை பெற்று வந்த அவர் நவம்பர் 17 அன்று பகல் அவர் உயிரிழந்தார். இவரது இறப்புத் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணை மேற்கொண்டார். சாட்சிகளை ஒட்டிசுட்டான் பொலிசார் நெறிப்படுத்தினர்.

காலைக்கதிர் Kalaikkathir

# லஞ்சம் வாங்கிய குற்றச்சாட்டில் பொலிஸ் அலுவலர் ஒருவர் கைது



பூநகரி போலீஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலீஸ் உத்தியோகத்தர் ஒருவர் கடந்த சனிக்கிழமை மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒருவரிடம் பலவந்தமாக லஞ்சம் பெற்றதை அடுத்து சம்பந்தப்பட்ட மோட்டார் சைக்கிள் சாரதி கிளிநொச்சி மாவட்டஉதவி பொலீஸ் அத்தியச்கருக்கு வழங்கப்பட்ட தகவலுக்கு அமைவாக பூநகரி சங்கப்பட்டி பாலத்தில்கடமையாற்றிக் கொண்டிருந்த பொலீஸ் சாஜன் உத்தியோகத்தரை பொலிஸ் உதவி அத்தியச்சகர் பிரிவினரால் பதினையாயிரத்துக்கு மேற்;பட்ட பணத்துடன் கைது செய்யப்பட்டுள்ளளார் கைது செய்யப்பட்ட சந்தேகநபர் கிளிநொச்சி நீதிமன்றம் முற்படுத்தப்பட்ட பொழுது 14 நாள்கள் தடுப்பு காவலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவுக்கு அமைவாக பொலீஸ் உத்தியோகத்தர் தடுப்பு காவலில் வைக்கப்பட்டுள்ளார். இச்சம்பவம் தொடர்பாக புனகரி பொலிஸார் மேலதிகவிசாரனைகளை மேற்கொண்டுவருகின்றனர். (113)

# உள்ளூராட்சி மன்றங்களையும் ஆளும் தரப்புக்கே வழங்குவோம்

## நகர அபிவிருத்திக்கு அதுவே வழி என்கிறார் ரஸ்மி

(சியாஜ்)

புத்தளம்நகரின்துரிதஅபிவிருத்திகளைபெற்றுக் கொள்ளவேண்டுமாயின்ஆளும்அரசாங்கத்துக்கே வாக்களித்து உள்ளூராட்சி மன்றங்களையும் வெற்றிபெறச்செய்ய வேண்டும் என புத்தளம் நகர சபையின் முன்னாள் உறுப்பினர் எம்.எச்.எம்.ரஸ்மி தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாகஅவர்மேலும்தெரிவிக்கையில்–

இலங்கைநாட்டின்ஆளும்அரசாங்கம்,அதாவது ஜனாதிபதியும் நாடாளுமன்றமும் இருக்கும் அதே கட்சிக்கு மாநகர சபை, நகர சபை மற்றும் பிரதேச சபைகளை வெற்றி பெறச்செய்வதால் அந்தந்த நகரங்களும் கிராமங்களும் மிக விரைவாக அபிவிருத்தி அடையும்.

கட்சி வெறியை புறந்தள்ளி, நமது சமூகம் நமது நகரம் அல்லது நமது கிராமம் முன்னேற வேண்டும் என்ற தூய உள்ளம் இருக்குமாயின். துரித அபிவிருத்தி கிடைக்கப்பெற வேண்டுமென்று கருதினால், நாட்டின் ஆளும் அரசாங்கத்துக்கே உள்ளூராட்சிமன்றங்களையும்வழங்கவேண்டும்.

வெற்றிபெற்ற ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் அவர்களின் நிதி ஒதுக்கீட்டில் நிறைந்த அபிவிருத்திகளை பெற்றுத்தருவார்கள்.

சிறந்த ஒத்திசைவும், தரமான அதிகாரமும் இருக்கும். உள்ளூர் பிரச்சினைகளுக்கு துரித தீர்வுகள் வழங்கப்படும். எந்த திட்டங்களுக்கும் முன்னுரிமைவழங்கப்படும். அரசநிறுவனங்களும், நிர்வாகத்தினரும் ஒத்திசைந்து இயங்குவர். நாட்டுக்கு ஜனாதிபதி போன்று ஊருக்கு நகர தலைமை மிகச்சிறந்த அதிகாரத்துடன் இருக்கும்.

மத்திய அரசாங்கத்தினதும், மாகாண மட்டத்தினதும் ஒருமித்த கருத்துடன் தேசிய திட்டங்கள் மிக விரைவாக உள்ளூருக்குள் நடைமுறைப்படுத்தப்படும்.

மிகப்பாரிய அபிவிருத்தி மற்றும் பொருளாதார ஊக்குவிப்பு திட்டங்களை இலகுவாக நடைமுறைப்படுத்தலாம். வேலைவாய்ப்புகளை இலகுவாக பெற்றுக்கொள்ளலாம்.

உட்கட்டமைப்பு வசதிகள் (பாதைகள், போக்குவரத்து வசதிகள், நிரந்தர வடிகால் திட்டங்கள், வீட்டுத்திட்டங்கள், வெள்ளத்தடுப்பு விடயங்கள், சுகாதார வேலைத்திட்டங்கள்) போன்ற பாரிய திட்டங்கள் மத்திய அரசின் ஒதுக்கீட்டினூடாக மிக விரைவாக மேட்கொள்ளப்படும்.

நிதி ஒதுக்கீடுகள் மிக விரைவாக அங்கீகரிக்கப்படும். பாரிய திட்டங்கள் மிக விரைவாக அனுமதி வழங்கப்படும்.

தேசிய மற்றும் உள்ளூர் திட்டங்கள் ஒரே நேர்கோட்டில் இருக்கும். எதிர்ப்புகள் இல்லாமல் இலகுவாக நடைமுறைப்படுத்தப்படும்.

மிகமுக்கியமாக, மத்திய அரசாங்கம் தனது குழந்தையை போன்று பராமரித்துக்கொள்ளும்.

இதற்கு மாற்றமாக நாம் பிறிதொரு கட்சியை வெற்றிபெற செய்வதால் நிச்சயமாக மேற்கூறிய அனைத்தையும் இழந்து ஒரு டம்மி மன்றமாகவே இயங்கும்.

வெறும்கூளம்அள்ளுவதும், அவ்வப்போது சில படம் காட்டும் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்வதும், அங்குமிங்குமாக சில நிகழ்ச்சிகளில் கௌரவ அதிதிகளாக படம்காட்டுவதும் மாத்திரமே இருக்கும்.

எனவே மக்கள் எவ்வாறு ஜனாதிபதியையும், நாடாளுமன்ற உறுப்பினர்களையும் ஒன்றாக இணைந்து பெற்றீர்களோ அவ்வாறே நகர சபை, மாநகர சபை மற்றும் பிரதேச சபைகளையும் ஒற்றுமையாக ஆளும் கட்சிக்கே வழங்கி இழந்துபோன உரிமைகளையும் அபிவிருத்திகளையும் பெற்றுக்கொள்வோம்.

அதே போன்று அரசியல்வாதிகளும் அவரவரது சுயநலன்களை ஓரமாக வைத்து, தமது மக்களின் மீது உண்மையான அன்பிருந்தால், ஆளும் தரப்பை வெற்றிபெற உதவி செய்யுங்கள் எனத் தெரிவித்துள்ளார்.




காலைக்கதிர் Kalaikkathir

# திருகோணமலையைச் சேர்ந்த 9 வயது சிறுமியின் சாதனை

(ஹஸ்பர்)

திருகோணமலை ஸ்ரீசண்முகா இந்து மகளிர் கல்லூரி மற்றும் றிங்கோ செஸ் அக்கடமியை ஐ சேர்ந்த ஜெகதீசன் மற்றும் திருமதி.ஷோபனா ஆகியோரின் புதல்வி நிவாஷ்னி, 2023ஃ24 தேசிய இளம் வீரர்கள் சதுரங்க சாம்பியன்ஷிப் போட்டியில் 425 போட்டியாளர்களுடன் போட்டியிட்டு 29ஆவது இடத்தைப் பெற்று மெரிட் தரத்தை பெற்றுள்ளார்.

இது திருகோணமலையின் சதுரங்க வரலாற்றில் ஒரு முக்கிய சாதனையாகும். இந்த போட்டி 2023 டிசெம்பர் 27 முதல் 30 வரை பன்னிப்பிட்டிய தர்மபால வித்தியாலயத்தில் நடைபெற்றது. 9 சுற்று சுவிஸ் முறையில் நடந்த இப்போட்டியை ஸ்ரீலங்கா சதுரங்க சம்மேளனம் ஒழுங்கு செய்தது.

இதனை தொடர்ந்து செல்வி நிவாஷ்னி, 2024 ஆம் ஆண்டு இலங்கையில் நடைபெற்ற சர்வதேச போட்டியானா ,பொதுநலவாய இளம் வீரர்கள் சதுரங்க விளையாட்டுகளில் சுயினை, சதுரங்க போட்டி வகைகளில் பங்கேற்று, சர்வதேச சதுரங்க போட்டியில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்திய முதல் திருகோணமலை வீராங்கனையாகியுள்ளார்.

# கோமாரியில் காட்டு யானை தாக்கி குடும்பஸ்தர் இறப்பு

*(சகாதேவராஜா)*

*அம்பாறை மாவட்டத்தில் பொத்துவிலை அடுத்துள்ள கோமாரிப் பிரதேசத்தில் காட்டு யானை தாக்கி 46 வயது உடைய குடும்பஸ்தர் ஒருவர் பலியாகி உள்ளார் .*

*மூன்றுபிள்ளைகளின்தந்தையானவிவசாயிஜெயரட்ணம் நவநேசன்(வயது 46) இவ்வாறு பலியானவராவார்.*

*இச்சம்பவம் திங்கட்கிழமை அதிகாலை ஒரு மணி அளவில் கோமாரி காட்டுவெளி பூனைப் போக்குப் பகுதியில் இடம்பெற்றது.*

*வயல் காவலுக்காக சென்ற விவசாயியான இவரது பிரேதம் பொத்துவில் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.*

*அடிக்கடி கோமாரி பிரதேசத்தில் காட்டு யானை தாக்குதலில் மனிதர்கள் பலியாகி வருவது வழமையாகி விட்டது.*

# ஏழு அம்சக் கோரிக்கையின் அடிப்படையில் எனது எதிர்காலச் செயற்பாடுகள் அமையும்

## கல்முனை வெற்றி விழாவில் கோடீஸ்வரன் உரை





(சகாதேவராஜா)

அம்பாறை மாவட்ட தமிழ் மக்கள் அனைவரையும் அரவணைத்து புதுப் பொலிவுடன் பரிணமிக்கும் சிறந்த கட்டமைப்பை ஏற்படுத்துவேன். மேலும் ஏழு அம்ச கோரிக்கையின் அடிப்படையில் எனது எதிர்கால செயற்பாடுகள் அமையும்.

- இவ்வாறு அம்பாறை மாவட்டத்தில் இலங்கை தமிழரசுக் கட்சி சார்பில் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.கே. கோடீஸ்வரன் தெரிவித்தார்.

கல்முனையில் அவருக்கு அளிக்கப்பட்ட வெற்றி விழா வரவேற்பு நிகழ்வில் உரையாற்றிய பொழுது அவர் மேற்கண்டவாறு கூறினார் .

கல்முனை மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர் எஸ்.சிவலிங்கம் தலைமையில் மேற்படி நிகழ்வு திங்கட்கிழமை காலை நடைபெற்றது.

பெருந்திரளான கல்முனை தமிழ் மக்கள் கூடிய அந்த நிகழ்வில், இரண்டாம் தடவையாக நாடாளுமன்ற உறுப்பினராக பதவியேற்கவிருக்கின்ற ஏ.கே.கோடீஸ்வரன் மேலும் தெரிவிக்கையில் -

இம்முறை அம்பாறை மாவட்ட தமிழ் மக்கள் தமிழர்களின் இருப்பையும் அடையாளத்தையும் பாதுகாத்துஇருக்கின்றீர்கள். எனதுதமிழரசுக்கட்சியையும் என்னையும் வெல்ல வைத்து இருக்கிறீர்கள். அந்த வகையில் முதற்கண் அனைத்து தமிழ் மக்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

அம்பாறை மாவட்டத்தில் புதுப்பொலிவுடன் ஒரு சிறந்த கட்டமைப்பை ஏற்படுத்த இருக்கின்றோம். அதற்கு அனைத்து தமிழ் மக்களையும் அனைத்து தமிழ்க் கிராமங்களையும் இணைத்து ஒன்று சேர்த்து இந்த கட்டமைப்பை உருவாக்க இருக்கிறோம் .

அதன்படிமூன்றுமாதங்களுக்குஒருமுறைஉங்கள் பிரதேசங்களுக்கு வந்து மக்களுடன் பேசி இருக்கின்ற பிரச்சினைகளை அடையாளம் கண்டு தீர்ப்பதற்கான வழிவகைகளை திட்டமிட்டு கொண்டிருக்கின்றோம்.

மக்களது வாழ்வியல் பொருளாதாரம் கல்வி கலாசாரம் என்பவற்றை மையப்படுத்தி இந்த சிறந்த கட்டமைப்பு ஏற்படுத்தப்பட இருக்கின்றது .

நாங்கள் அமையப்போகும் மத்திய ஆளும் அரசாங்கத்துடன் பேசி சிறந்த பேச்சுகளை நடத்தி மக்களுக்குசெய்யவேண்டியஅனைத்துபணிகளையும் எதிர்காலத்தில் செய்ய இருக்கின்றோம்.

உங்களுடன் இணைந்து தான் எந்த முடிவும் எடுக்கப்படும்.

நான் ஏழு அம்ச கோரிக்கையை மையப்படுத்தி தேர்தல் கேட்டவன். அந்த ஏழு அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி எனது எதிர்கால செயற்றிடங்கள் அமைய இருக்கின்றன.

எமது கல்முனை வடக்கு பிரதேச செயலகம் பிரதேச சபைகள் புதிய வலயங்கள் மற்றும் இயற்கை வளம் சுரண்டல் போன்ற 7 அம்ச கோரிக்கையை மையப்படுத்தி அது முன்னெடுத்து செல்லப்படும்.

இனிஅனைவரையும்அரவணைத்து ஆலோசனை பெற்று எமது எதிர்காலத் திட்டங்கள் தொடரும். அதன்படியே எந்த முடிவும் எடுக்கப்படும் என்பதனை இங்கு உறுதியாக கூறி வைக்க விரும்புகின்றேன்.

மீண்டும் அனைவருக்கும் நன்றிகள். - என்றார்.

நிகழ்வில் இலங்கை தமிழரசுக் கட்சியின் உறுப்பினர் வி.குலசேகரம் உள்ளிட்ட பொதுமக்கள் கலந்து கொண்டனர்.




காலைக்கதிர் Kalaikkathir

## கற்கோவளம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவத்தலைமையகம்உத்தரவிட்டுள்ளது. இதற்கமைய நேற்று மாலையில் இருந்து முகாம்அகற்றும்பணி இடம்பெற்று வருகிறது.

முகாம் அமைந்திருந்த காணிகள் வடமராட்சிவடக்குபிரதேசசெயலகத்திற்குட்பட்ட கற்கோவளம் கடற்கரையுடன் அண்டிய பகுதியில் உள்ளன. மூன்று சகோதரர்களுச் சொந்தமானவை. இவற்றைச் படை முகாமுக்காகச் சுவீகரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டபோது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் கஜேந்திரன், மற்றும் சிவாஜிலிங்கம் போன்ற முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களும் அவர்களின் ஆதரவாளர்களும் காணி உரிமையாளர்களுடன் இணைந்து அதற்கெதிராகப் போராட்டம்நடத்தி அளவீட்டுப் பணியைத் தடுத்து நிறுத்தியிருந்தனர்.

இப்போது அந்தக் காணியை விடுவிப்பதற்குப் படைத் தரப்பு இணக்கம் தெரிவித்துள்ளது.

## ஊழலுக்கு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயற்படத் தயாராக இருக்கிறார் என மீண்டும் உறுதிப்படுத்தினார்.

சர்வதேச நாணய நிதியத்தின் தூதுக் குழுவினர், தீர்மானகரமான தேர்தல் வெற்றிக்குஜனாதிபதிமற்றும்அணியினருக்கு வாழ்த்துக்களை தெரிவித்ததுடன், புதிய ஆளும்தரப்புடன் ஒத்துழைத்துச் செயற்பட எதிர்பார்ப்பதாக தெரிவித்தனர்.

சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத்திட்டத்தின் வெற்றியானது தற்போதுள்ள ஆட்சியின் மீது பொதுமக்களின் நம்பிக்கையை கட்டியெழுப்புவதில் தங்கியுள்ளது என வலியுறுத்திய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, மக்கள் ஆணைக்கு அமைய செயற்படுவது தமது ஆட்சியின் பொறுப்பு எனவும் வலியுறுத்தினார்.

மக்களின் அவசரத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு தமது ஆளும்தரப்பு அர்ப்பணிப்புடன் செயற்படுவதாகத் தெரிவித்த ஜனாதிபதி, மக்கள் எதிர்நோக்கும் சிரமங்களைக் கருத்தில்கொண்டு சமநிலையான அணுகுமுறையைக் கடைப்பிடிக்குமாறு சர்வதேச நாணய நிதியத்திடம் கோரிக்கை விடுத்தார். தனது தலைமையின் கீழ், சிறுவர் வறுமை மற்றும் போசாக்கின்மை போன்ற அத்தியாவசிய நலன்களுக்கு முன்னுரிமை அளிப்பதையும் சமூகசேவைகளுக்கானஒதுக்கீடுகள்திறம்பட பயன்படுத்தப்படுவதையும் உறுதிசெய்தார்.

கடந்த காலங்களில் சமூக சேவை செலவினங்களுக்கான ஒதுக்கீடுகள் முழுமையாக பயன்படுத்தப்படவில்லை என சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குறிப்பிட்டதுடன், வளங்களை வினைத்திறனான ஒதுக்கீடு மற்றும் பாவனையை உறுதிப்படுத்தத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வது குறித்தும் ஜனாதிபதிக்கு எடுத்துரைத்தனர்.

நாட்டை ஆட்சி செய்வது மற்றும் ஊழலை எதிர்த்துப் போராடுவது குறித்து இங்கு முக்கியமாக ஆராயப்பட்டது. மக்கள் வழங்கிய ஆணையின் முக்கிய அம்சமான ஊழலுக்கு எதிரான போராட்டத்தில் தானும் தனது ஆளும்தரப்பினரும் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றனர் என்று அரசுத் தலைவர் இங்கு வலியுறுத்தினார்.

அந்த செயற்பாடுகளில் வெளிப்படைத் தன்மை மற்றும் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்தும் வகையில், சட்டமியற்றும் மற்றும் ஏனைய நிறுவன ரீதியான கட்டமைப்புகளை மேம்படுத்துவதற்கு தமது ஆளும்தரப்புகடுமையானஒழுங்குவிதிகளை அமுல்படுத்தும் என ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க,சர்வதேசநாணயநிதியகுழுவிடம் தெரிவித்தார்.

இந்த சந்திப்பு ஆளும்தரப்புக்கும் சர்வதேச நாணய நிதியத்திற்கும் இடையிலான ஒத்துழைப்பில் ஒருசாதகமான முன்னேற்றத்தைக் குறிப்பதோடு அதன் ஊடாகபொருளாதாரமீட்சிமற்றும்நீண்டகால ஸ்திரத்தன்மைக்கான ஒருங்கிணைந்த முயற்சிகளுக்கான அடித்தளத்தை அமைக்கிறது.

இக்கலந்துரையாடலில் நிதியமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவும், தொழில் அமைச்சர் பேராசிரியர் அனில் ஜயந்த பெர்னாண்டோ, நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன சூரியப்பெரும மற்றும் நிதியமைச்சின் பிரதிநிதிகளும் இணைந்துகொண்டனர் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஒடுக்கப்பட்ட....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

குறிப்பாக இலங்கை அரசியலில் மிகவும் முக்கியத்துவமான திருப்புமுனை செப்டம்பர் 21 நிகழ்ந்தது. நீண்டகாலமாக எமது நாடு பயணித்த பாதையை மாற்றியமைப்பதற்கு மக்கள் செப்டம்பர் 21 தீர்மானம் எடுத்தனர். அதன் பின்னர் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் செப்டம்பர் 21எடுத்த தீர்மானத்தை மேலும் பலப்படுத்துவது தொடர்பில் எம் மீது மக்கள் நம்பிக்கை வைத்துள்ளனர்.

இந்த மாற்றத்திற்காக எமது நாட்டு மக்கள் மிகுந்தஆர்வத்துடன்பங்கேற்றார்கள்என்பதை நாம் அனைவரும் அறிவோம். இலங்கை வரலாற்றில் எப்பொழுதும் வடக்கிற்கு எதிராக தெற்கு அரசியலும் தெற்கிற்கு எதிரான வடக்கு அரசியலும்தான் அரசியல் வரைபடத்தில் பொதிந்திருந்தது. அல்லது ஒவ்வொரு மக்கள் குழுக்களிடையிலும்சந்தேகம்அவநம்பிக்கை, குரோதம் என்பவற்றை தூண்டும் அரசியலே காணப்பட்டது.

ஆனால் இந்தத் தேர்தல் முடிவுகள், இனியும் எமது நாட்டில் பிரித்தாளும் அரசியல் செல்லுபடியற்றது என்பதைக் காட்டுகிறது. வடக்கிலும் தெற்கிலும் கிழக்கிலும் மேற்கிலும் பொதுமக்களின் எதிர்பார்ப்புக்களை ஒரே மையப்புள்ளியில் இணைக்க இந்தத் தேர்தலால் முடிந்துள்ளது. அதற்காக தேசிய மக்கள் சக்திக்கு பலம் வாய்ந்த மக்கள் ஆணையை வழங்குவதற்காக ஆர்வம் காட்டிய அர்ப்பணித்த அனைத்து மக்களுக்கும் நன்றி தெரிவிக்கிறோம்.

அதேபோன்று எமக்கு வாக்களிக்காமல் வேறு கட்சிக்கு வாக்களித்தாலும் நாம் எதிர்பாக்கும் பணிகள் மற்றும் நோக்கங்கள் அவர்களினதும் நோக்கமாகும் என்பது திண்ணம். பிரித்தாளும் அரசியலை எந்தப் பிரஜையும் விரும்புவார்கள் என நான் நினைக்கவில்லை. ஜனநாயகத்தை முடக்குவதை எந்த அரசியல்வாதியும் விரும்புவர்என்றுகருதவில்லை. இவ்வாறான சாதகமான விடயங்கள் அனைத்து பிரஜைகளின் மனங்களிலும் பொதிந்துள்ளது.

எமக்கு வாக்களித்தவர்கள் சாதகமான விடயத்தை தேர்தலின் ஊடாக வெளிப்ப டுத்தியுள்ளனர். எமக்கு வாக்களிக்கா தவர்களிடமும் எமது எதிர்பார்ப்புகள் உள்ளன என நாமும் முழுமையாக நம்புகிறோம். எனவே இனியும் இந்தத் தேர்தலில் மகிழ்ச்சி அடையும் குழு மற்றும் இந்தத் தேர்தலினால் விரக்தியடைந்த குழு என இரண்டு குழுக்கள் நாட்டில் இல்லை.

தேசிய மக்கள் சக்தியின் மூலம் இந்த நாடு விரும்பிய இலக்குகளை அடைவதற்கு இந்த மக்கள் அனைவரின் ஆதரவும் நம்பிக்கையும் எங்களுக்குத் தேவை. எனவே, ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற பின்னரும், இந்த நாட்டில் ஜனநாயகத்தை எவ்வாறு அமைதியான முறையில் நிலைநிறுத்துவது, மற்றவர்களின் அரசியல் உரிமைகளை எவ்வாறு மதிப்பது என்பதை நாம் தேர்தல் முடிவுகளின் பின்னர் காட்டியுள்ளோம்.

இந்நாட்டு மக்களுக்கு இது ஒரு புதிய அனுபவமாக நான் கருதுகிறேன். ஆனால் அந்த அனுபவம் நம் நாட்டின் ஒவ்வொரு குடிமகனும் எதிர்பார்க்கும் அனுபவம் என்று நாங்கள் கருதுகிறோம். அத்துடன், பொதுத் தேர்தலின் பின்னரும், தேர்தல் காலத்திலும் இலங்கை வரலாற்றில் மிகவும் அமைதியான

முறையில் தேர்தலை நடத்துவதற்கு எமது ஆட்சியில் வாய்ப்பளிக்கப்பட்டது. அது அவர்களின் உரிமையாகும். அத்துடன், இத்தேர்தல் ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க தேர்தலாகும்.

இத்தேர்தலில்பலதனித்துவங்கள்உள்ளன, அளவுரீதியாக நோக்கினால் , இலங்கை வரலாற்றில், பொதுத்தேர்தலொன்றில்கிடைத்த மிகப்பெரியவெற்றி இது. அரசியல்கட்சியென்ற ரீதியில்பெற்றபெரும்வெற்றியுமாகும். தேர்தல் வரலாற்றில் ஒரு ஆளும்தரப்பு அடைந்த முதல் வெற்றியாகும். மறுபுறம், இது மக்கள் மகிழ்ச்சியடையக்கூடிய வெற்றியாகும். அவ்வாறான வெற்றியொன்று நமக்கும் நமது குடிமக்களுக்கும் எப்படி கிடைத்தது? நம் நாட்டிற்கு அந்த மாற்றங்கள் தேவை.

நமது நாட்டுக்கு பல்வேறு வகையான வெற்றிகள் கிடைத்த போதெல்லாம், நமது பொதுவான இயல்பு தோல்வியுற்றவரின் அல்லது மற்ற தரப்பினரின் மனதை நோகடிக்கும் மற்றும் காயப்படுத்தும் வரலாற்றைக் கண்டுள்ளோம். ஆனால் இந்த தேர்தலின் பின்னர் நிரந்தரமாக புதிய அரசியல் கலாசாரத்தை எமது நாட்டில் உருவாக்கியுள்ளோம். பொதுத் தேர்தலுக்குப் பிறகு, அதனை தொடர்ச்சியாக நாங்கள் பாதுகாத்துள்ளோம்.

சம்பவங்கள் நடக்கலாம். மற்றொரு கட்டத்தில், அமைதியான ஜனநாயகம் இருக்கலாம். மற்ற சமயத்தில், மோதல் நிலைமை இருக்கலாம். ஆனால் அவை மீண்டும் மீண்டும் நிகழும்போது மட்டுமே அது சரி செய்யப்படுகின்றன. எனவே, இந்த ஜனநாயகத்திற்காக நாம் திறந்துள்ள கதவுகளும், பொதுமக்களுக்கிருக்கும் ஜனநாயக உரிமைகளைப் பாதுகாப்பதற்கான நமது கடமையும் ஓரிரு சந்தர்ப்பங்களுக்குள் மட்டுப்படுத்தினால்அவைவெறும்நிகழ்வுகளாக மாறிவிடும். ஆனால்அதனை தொடர்ச்சியாகப் பேணினால் அவை வெறும் சம்பவங்களாக மாறிவிடாது. எனவே, இந்த ஜனநாயகத்தில், குடிமக்களின் உரிமைகளைத் தொடர்ந்து பாதுகாத்து, அவர்களை உயர்த நிலைக்குக் கொண்டு வருவது நமது பொறுப்பாகும் . இது ஆளும்தரப்பின் முக்கியமான பொறுப்பு என்று நான் கருதுகிறேன்.

குறிப்பாக இந்த தேர்தல் பரப்புரையில் வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்கள் எமக்கு மிகுந்த உற்சாகத்தையும் தைரியத்தையும் கொடுத்தனர். தேர்தல் வரலாற்றில் வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்கள் தேர்தலில் அதிக ஆர்வம் காட்டிய மற்றொரு சந்தர்ப்பம் இருக்கிறது. அந்தச் சந்தர்ப்பத்தை மிஞ்சும் வகையில் வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்களின் தலையீடும் பங்களிப்பும் செயற்பாடும் இத்தேர்தலில் கொடுக்கப்பட்டதாகவே கருதுகிறேன்.

அவர்கள் இலங்கைக்கு வெளியில் இருந்தாலும் இந்தத் தேர்தல் முடிவுகளை மிகுந்த மகிழ்ச்சியுடனும் உற்சாகத்துடனும் கொண்டாடியதை நாம் அறிவோம். அவர்களுக்கு நாம் எமது நன்றிகளை தெரிவிக்கிறோம். பொதுவாக தேர்தலின்போது அரசியலின் மிக முக்கியமான பகுதி நமது கருத்தையும் நிலைப்பாடுகளையும் சமூகத்திற்கு எடுத்துச் செல்வது என்பதை நாம் அறிவோம். அதனைச் சமூகத்திற்குக் கொண்டுசெல்வதில்ஒரு அரசியல் இயக்கமாக நாங்கள் சில பணிகளைச் செய்தோம். சமூக ஊடகங்களில் அந்தப் பொறுப்பை தானாக முன்வந்து முன்னெடுத்த புதிய தலைமுறையொன்றும்இருந்தது. அந்தஇளம் தலைமுறையினரின் விசேடஎதிர்பார்ப்புகளை நாம் புரிந்துகொள்ளவேண்டும். சமூக வலைத்தளங்களில் வெறும் பந்தயம், போட்டி, வெற்றி

தோல்வியை பகிர்ந்துகொள்ளும் போட்டி என்பன வெளிப்படுத்தப்படவில்லை. இது புதிய இளைஞர் தலைமுறையின் எதிர்பார்ப்புகளையும் இலக்குகளையும் வெளிக்காட்டியது. எனவே நாம் அதற்குக் கடமைப்பட்டுள்ளோம். அது முக்கியமானது என்று நான் கதுதுகிறேன். எனவே, இந்த வெற்றியை அடைய பல்வேறு வழிகளில் உதவிய அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். ஆனால் நாம் புரிந்துகொள்ள வேண்டிய ஒரு விடயம் இருக்கிறது.

பெரும் நம்பிக்கையுடன் இந்த மக்கள் எழுச்சி பெற்றதன் இரகசியம் என்ன? நீண்டகாலமாக எமது நாட்டுக் மக்கள் பல்வேறு இன்னல்களை எதிர்நோக்கி வந்தனர். நம் நாட்டின் குடிமக்கள் சட்டத்தின் முன் அநாதரவாகவும் ஒடுக்கப்பட்டும் இருப்பது வழமையான காட்சியாகும். மேலும் பொருளாதார ரீதியில் புறக்கணிக்கப்பட்ட ஒரு குழுவினர் உள்ளனர். பொருளாதாரத்தில் அவர்கள் மனிதத் தூசியாகி விட்டனர். போதிய உணவின்றி, சரியான வீடின்றி, ஆரோக்கியமாக வாழ வாய்ப்பில்லாமல் பொருளாதார ரீதியாக ஒடுக்கப்பட்ட மக்கள் குழுவொன்று உள்ளது.

மேலும், அவர்கள் தங்கள் அறிவையும் திறனையும் தங்கள் ஈடுபட்டுள்ள தொழிலில் சுதந்திரமாகப் பயன்படுத்த முடியுமா? எனவே தொழில்வல்லுநர்கள்தங்கள்தொழில்துறையில் தங்கள் பொறுப்புகளை நிறைவேற்றுவதில் அழுத்தங்களை எதிர்கொண்டனர். மேலும், தாம் பேசும் மொழியின்படி, பின்பற்றும் மதத்தின்படி, அவர்களின் கலாச்சாரத்தின்படி ஒதுக்கப்பட்ட ஒடுக்கப்பட்ட மக்கள் கூட்டம் இருந்தது. எப்போதும் தாம் இலங்கையில் தனிமைப்படுத்தப்பட்டதாக நினைக்கிறார்கள். அவர்கள் இலங்கையில் ஒதுக்கப்பட்ட மக்கள் என்று நினைக்கிறார்கள். அவர்கள் இலங்கையில் சம உரிமைகளைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்குப் பதிலாக, உரிமைகள் மட்டுப்படுத்தப்பட்ட மக்கள் குழுவெனக் கருதுகிறார்கள். எனவே, அத்தகைய துன்புறுத்தல் இருந்தது.

ஒவ்வொரு துறையிலும் உள்ள மக்கள் குழுக்களை அவதானித்தால், அவர்களுக்கே உரித்தான, அவர்களுக்கே தனித்துவமான பல அடக்குமுறைகளை பொதுமக்கள் எதிர்கொண்டனர். சட்டத்தை அமுல்படுத்த முயலும் அரச அதிகாரிகளும் இந்த அடக்குமுறைக்கு பலியாகி இருப்பதை நான் அறிவேன். அதுதான் உண்மை நிலை. எனவே, இந்தத் தேர்தல் முடிவுகள் ஒடுக்கப்பட்ட மக்களின் சுதந்திரத்தின் அழைப்பாகும். அவர்கள் இந்த சுதந்திரத்தை எதிர்பார்த்தனர். இந்தபல்வேறுவழிகளிலுமான அடக்குமுறைகளில் இருந்து அவர்கள் விடுபட வேண்டும். இந்த தேர்தல் முடிவு சுதந்திரத்தின் அவசியத்தை எடுத்துரைக்கிறது. எனவே அந்த குடிமக்களுக்குக் கிடைக்கும் சுதந்திரத்தை மட்டுப்படுத்த எங்களுக்கு எந்த உரிமையும் இல்லை. எனவே, ஒவ்வொரு துறையிலும் முழு சுதந்திரத்தை உறுதி செய்ய வேண்டும்.

தொழில்வல்லுநர்களாகியநாம்அவர்களின் அறிவுக்குஏற்பதங்கள்பங்கைசரியாகச்செய்ய வழங்கப்படும் சுதந்திரம், சட்டம் ஒழுங்கை நிலைநாட்டும் அதிகாரிகளுக்கு அவர்களின் பங்கைச் செய்ய நாம் வழங்கும் சுதந்திரம், பொருளாதாரத்தில் நியாயமான பங்கைப் பெறுவதற்கு நாம் வழங்கும் சுதந்திரம், தமது மதம், மொழி மற்றும் கலாச்சாரத்தின் படி நாம் வாழ்வதற்கான உரிமை போன்ற அனைத்தையும்நாம் மீண்டும்உறுதிப்படுத்த வேண்டும். அதனால்தான் இலங்கையை மறுமலர்ச்சி யுகத்திற்கு கொண்டு செல்ல வேண்டும் என்று கூறுகிறோம்.

இந்த நாட்டு மக்களுக்கு இதனைவிட சுதந்திரமான சூழலை உருவாக்கவேண்டும். இந்த வெற்றியை அடைவதில் பொது மக்களின் பெரும் ஈடுபாடு இருந்ததை நாம் அறிவோம். எங்களுடைய அரசியல் இயந்திரத்துடன் தொடர்பில்லாத, எங்களைச் சந்திக்காத, எங்களுடன் கதைக்காத, ஊர், இடம் தெரியாத ஏராளமான மக்கள் எங்களுக்காகப் பாடுபட்டனர். பஸ்ஸில், ரயிலில், பணியிடத்தில், நிகழ்வுகளில் எங்கள் வெற்றிக்காக பெருமளவானவர்கள் பங்களித்தனர். இந்த வெற்றிக்காக நாங்கள் நீண்ட காலமாக போராடினோம் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். பல தசாப்தங்களாக போராடினோம்.

இங்குள்ள பலர் தங்கள் இளமைக் காலத்திலிருந்தே இந்தக் கனவுக்காகப் போராடியதை நான் அறிவேன். இந்தப் போராட்டத்தில், அவர்களின் நேரத்தையும் உழைப்பையும்மட்டுமல்ல, இந்தவெற்றிக்காக அவர்களின் உயிரையும் கூட தியாகம் செய்தனர். அது மட்டுமின்றி, ஆரம்பத்தில் மிகவும் கடினமான சந்தர்ப்பங்களில் இந்த இயக்கத்தைப் பாதுகாக்க தலையிட்டோம். சிலர் நடுவழியில் சென்றுவிட்டனர். பாதியில் விட்டு சென்றாலும், இந்த வெற்றியை அடைவதற்கு, ஆரம்பத்தில், நடுவில், எந்த கட்டத்திலும் எங்களுக்கு ஆதரவு வழங்கினர். அவைகளும் இந்த வெற்றிக்கு பெரும் உதவியாக இருந்தது.

எனவே, எங்களுக்கு இரு வகையான பொறுப்புகள் உள்ளன. ஒன்று பொதுமக்களின் இலக்குகள் மற்றும் அபிலாஷைகளுக்கான பொறுப்பு. இரண்டாவது இயக்கம் தொடர்பான பொறுப்பு. அதிகாரம் என்பது மிகவும் விசேடமான ஒன்று என்று நாங்கள் கருதுகிறோம். அதிகாரத்தில் இருந்து அதிகாரம் பிறப்பிக்கப்படுகிறது. அதிகாரத்தில் இருந்து அதிகாரம் விரிவுபடுத்தப்படுகிறது. அதிகாரத்தில் இருந்து மேலும் அதிகாரம் வளர்க்கிறது. ஆனால் சிலர் அதிகாரத்தை மோசடி என்று கூறுகின்றனர். அந்த எல்லையற்றஅதிகாரமானது எல்லையில்லாத அளவு மோசமானது என்கிறார்கள். அது நிரூபிக்கப்பட்டுள்ளது. நம் நாட்டில் இதுபோன்ற அதிகாரங்கள் உருவாக்கப்பட்ட பல சந்தர்ப்பங்கள் உள்ளன. ஆனால், அந்த அதிகாரங்களின் இறுதி முடிவை எடுத்துக் கொண்டால், அவை மக்களுக்கு நியாயமான பெறுபேறுகளை கொண்டு வரவில்லை. அந்த அதிகாரங்கள் எப்போதும் நாட்டுக்கும் மக்களுக்கும் எதிராகவே பயன்படுத்தப்பட்டன. எல்லையில்லா அதிகாரம் கிடைத்திருப்பதால்

தொடர்ச்சி8ம் பக்கம்....

## ஒடுக்கப்பட்ட ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்த எல்லையற்ற அதிகாரம் நம்மை எங்கே தள்ளும் என்ற சந்தேகம் சமூகத்தில் உருவாக்கி இருக்கிறது.

கொஞ்சமாவது சந்தேகம் கொள்ளும் அனைவருக்கும், நாம் சொல்வது ஆம் எமக்கு அதிகாரம் கிடைத்திருப்பது உண்மைதான். ஆனால் இந்த அதிகாரத்தின் எல்லைகளையும், இந்த அதிகாரம் நமக்குக் கையாளக் கொடுத்துள்ள எல்லையின் அளவையும் நாங்கள் அறிவோம். அதிகாரம் இருக்கிறது. ஆனால் அந்த அதிகாரத்திற்கு நமக்கு வரம்புகள் உண்டு. நாம் அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும். அந்த அதிகாரத்தில் ஒரு நோக்கம் இருக்கிறது. மக்களுக்கு வழங்கப்பட்ட நல்ல இலக்குகளையும் எதிர்பார்ப்புகளையும் நிறைவேற்றும் பொறுப்பு நீண்ட காலமாக அந்த அதிகாரத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

முக்கியமாக இந்த அதிகாரத்துடன் பொறுப்பும் இருக்கிறது. யாருக்கு? ஒருபுறம், குடிமக்களுக்கான பொறுப்பு. மறுபுறம் இயக்கத்திற்கான பொறுப்பு. எனவே, சட்டங்கள் மற்றும்

அரசியலமைப்புகளைப்பயன்படுத்துவதன் மூலம் எங்களுக்காக எந்த வகையான அதிகாரத்தை உருவாக்கினாலும், இந்த அதிகாரத்தை நாம் கையாள்வதில் நாம் பொறுப்புக் கூறவேண்டும் என்று நான் நினைக்கிறேன்.

எமக்கு பொறுப்பு உள்ளது.பிணைப்பு இருக்கிறது. எனவே, ஒரு அமைச்சரவை அந்தஸ்த்துள்ள அமைச்சருக்கு ஒரு சாதாரண குடிமகனை விட பாரிய பொறுப்பு உள்ளது. உங்களுக்கெல்லாம் அது புரியும். நான் புதிதாக எதுவும் சொல்ல வேண்டியதில்லை. உங்களிடம் அந்த வரம்புகள் உள்ளன. உங்களுக்கு ஒரு பொறுப்பு இருக்கிறது. உங்களிடம் ஒரு பிணைப்பு உள்ளது. அதனைப் பாதுகாப்பீர்கள் என்று நம்புகிறேன். மேலும், இங்கு அமைச்சரவைக்கு மாத்திரமன்றி நாடாளுமன்றத்துக்கும் பலர் புதியவர்கள். ஆனால் நாங்கள் வெவ்வேறு நோக்கங்களுக்காக பல்வேறு துறைகளில் நீண்ட காலமாக பணியாற்றியுள்ளோம். நீங்கள் ஒரு தொழிற்துறையைப் போலவே வேகமாக பணியாற்றியிருக்கிறீர்கள். அரசியல் செயற்பாட்டாளராக பணியாற்றியுள்ளீர்கள். எனவே, நீங்கள் அனைவரும் அமைச்சரவைக்கு புதியவர்கள், நாடாளுமன்றத்திற்கு புதியவர்கள், ஆனால் அரசியலுக்கு புதியவர்கள் அல்ல. பணியாற்றுவதில் புதியவர்களல்ல,

எனவே இந்த அமைச்சரவையினால் புதுவிதமான முன்மாதிரிகள் பலவற்றை மக்களுக்கு வழங்க முடியும் என்று நினைக்கிறோம். நாடு எதிர்பார்க்கும் சாதனைகளை முன்னெடுக்க இந்த தேர்ந்தெடுக்கப்பட்ட அமைச்சரவையால் முடியும் என்று நான் நம்புகிறேன். நாங்கள் சிறப்பாக வழிநடத்தி பாடுபட்டால் அந்த இலக்கை அடையலாம். அதற்கான திறமை உங்களுக்கு இருக்கிறது. உங்களுக்கு அந்த நோக்கம் இருக்கிறது. நீங்கள் மோசடியற்றவர்கள். நீங்கள் நேர்மையானவர் என்று தனிப்பட்ட முறையில் நான் அறிவேன். இந்தப் பணியை நிறைவேற்றும் தைரியம் உங்களுக்கு இருக்கிறது.

எனவே, இந்தப் பணியை நேர்மையாகச் செய்வீர்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு உள்ளது. அந்த நம்பிக்கையுடன் தான் நாம் செயல்படுகிறோம். மேலும், ஒரு சமயத்தில் அரசியலில், அரசியல் நோக்கங்களுக்காக இயக்கத்தைக் கட்டியெழுப்ப அதற்காக பங்காற்ற வேண்டியிருந்தது. எங்களிடம் நல்ல நோக்கங்கள் இருந்தன. அந்த நோக்கங்களை அடைவதற்கான அதிகாரத்தைப் பெறுவதற்கு நாங்கள் பாடுபட்டோம். நமது கோசங்கள், நமது செயல்பாடுகள், இவை அனைத்தும் அதிகாரத்தைப் பெறும் போராட்டத்தின் போக்கில் தான் இருந்தன. நாம் முட்டிமோதி இந்த நாட்டு மக்களுக்கு இந்தத் தேவையை உணர்த்தியுள்ளோம். அதுதான் பெறுபேறு. அரசியல் வெற்றி கிடைத்துள்ளது. எம்மை இனி அரசியல் கோஷங்களால் மட்டும் அளவிடக் கூடாது.

செப்டம்பர் 21க்கு முன்னரும், நவம்பர் 14க்கு முன்னரும், எங்கள் கோஷங்களின் அடிப்படையில் தான் எம்மை அளவிட்டார்கள். ஆனால், நவம்பர் 14க்குப் பிறகு, ஆட்சியில் நாம் சிறப்பானவர்களா இல்லையா என்ற காரணிக்கமையவே அளவிடுவர். முன்பெல்லாம் நமது அரசியல் செயல்பாடு நல்லதா கெட்டதா என்பதை வைத்து அளவிடப்பட்டது. இனிமேல் நமது ஆட்சி நல்லது கெட்டது என்ற காரணியால் எம்மை அளவிடுவர். எனவே, எமது நீண்டகால முயற்சிகளையும், மக்களின் எதிர்பார்ப்புகளையும், அவர்கள் எதிர்பார்த்த இலக்குகளையும் வெற்றியடையச் செய்வதற்கு நல்லாட்சி அவசியமாகும். இனியும் நாம் கோஷங்களாலும் சித்தாந்தங்களாலும் அளக்கப்படப் போவதில்லை. இன்றிலிருந்து நமது கோஷங்களுக்கு எவ்வளவு உயிர் கொடுக்க முடிந்துள்ள ஆட்சி என்பதை வைத்து அளவிடப்படுவோம்.

எனவே, எங்கள் வெற்றி பெரியது என்பதோடு வெற்றி ஊடாக ஒப்படைக்கப்பட்டுள்ள பொறுப்பின் பாரமும் அதற்கு சமமானது. சில சமயங்களில் வெற்றிக்காக போராடுவோம் என்றும், வெற்றிக்குப் பிறகு திறமையுள்ள குழுக்கள் அடுத்த அடியை எடுத்து வைக்கும் என்றும் எமக்குக் கூறப்பட்டது. ஆனால் நல்லதோ கெட்டதோ வெற்றிக்காக போராட வேண்டியிருந்தது. வெற்றிக்குப் பிறகு அந்தப் பணியில் வெற்றிபெறும் முன்னோடிகளாகிவிட்டோம்.

எனவே அனைத்தும் உங்கள் மீது தான் சுமத்தப்பட்டுள்ளது. நீங்கள்தான் பிரதானம். உங்களால் எந்த அளவிற்கு உங்கள் துறைகளை திறம்பட நிர்வகித்து உங்களுக்கு கொடுக்கப்பட்ட பொறுப்பை நிறைவேற்ற முடியும்? தனிப்பட்ட போக்குகள், பொறுப்புகள் என்பவற்றை எந்தளவு உங்களால் நிறைவேற்ற முடியும்? இந்த அடிப்படையில்தான் நமது அடுத்த வெற்றி அல்லது தோல்வி தீர்மானிக்கப்படுகிறது.

செப்டம்பர் 21 மற்றும் நவம்பர் 14 ஆகிய இரு கட்டங்களிலும் நாம் சித்தியடைந்துள்ளோம். அடுத்து, நாங்கள் சித்தியடைவோமா இல்லையா என்பதை தீர்மானிப்பதில் உங்கள் வகிபாகம் பெரியது. சிறந்த ஆட்சிக்கான உங்களின் பொறுப்புக்கூறல் மற்றும் அர்ப்பணிப்பினால் தான் இதனை வெற்றிகரமாக நிறைவு செய்ய முடியும். அதற்காக ஒன்றுபட்டு செயற்படுவோம். அதற்காக ஒன்றுபட்டு குரல் கொடுப்போம் - என்றார்.



காலைக்கதிர்
Kalaikkathir

# நேற்றுப் பதவியேற்ற அமைச்சர்கள்

**அரசுத் தலைவர் அநுரகுமார திசநாயக்க உட்பட 21 அமைச்சரவை அமைச்சர்கள் நேற்றுப் பதவியேற்றுக்கொண்டனர்.**















காலைக்கதிர் Kalaikkathir

# நேற்றுப் பதவியேற்ற அமைச்சர்கள்












# நேற்றுப் பதவியேற்ற அமைச்சர்கள்













## போலித் தகவல் குறித்த தெளிவுபடுத்தல்




தமிழ் மக்களுக்கு ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளதாக சமூக ஊடகங்களில் பகிரப்படும் தகவல் போலியானது ஆகும்.

போர்களில் உயிரிழந்த தமிழ் மக்களுக்கு நவம்பர் மாதத்தில் பொது இடங்களில் நினைவேந்தல்களை செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகப் போலியான முறையில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் கையொப்பம் இடப்பட்ட அறிக்கை ஒன்று சமூக ஊடகங்களில் பகிரப்பட்டிருந்தது.

இவ்வாறான அறிக்கை ஒன்று ஜனாதிபதி தரப்பிலிருந்து வெளியாகவில்லை எனத் தெளிவு படுத்தப்பட்டுள்ளது.

எனவே, சமூக ஊடகங்களில் பகிரப்படும் போலியான தகவல்கள் குறித்து பொதுமக்கள் அனைவரும் மிகவும் கவனமாக இருக்க வேண்டும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## லொஹான் ரத்வத்தைக்கும் மனைவிக்கும் மறியல் நீடிப்பு



பதிவுசெய்யப்பட்ட இலக்கத்தகடு இல்லாத சொகுசு கார் ஒன்றை வைத்திருந்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தை மற்றும் அவரது மனைவி ஷஷி பிரபா ரத்வத்தை ஆகியோரால் தாக்கல் செய்யப்பட்ட பிணை மனு நுகேகொடை நீதிவான் நீதிமன்றத்தால் நேற்று (திங்கட்கிழமை) நிராகரிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், லொஹான் ரத்வத்தையை டிசெம்பர் மாதம் 02 ஆம் திகதி வரையும் , ஷஷி பிரபா ரத்வத்தையை நவம்பர் மாதம் 22 ஆம் திகதி வரையும் மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

லொஹான் ரத்வத்தையின் மனைவி ஷஷி பிரபா ரத்வத்தைக்குச் சொந்தமான நுகேகொடை, மிரிஹான பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் இருந்து பதிவுசெய்யப்பட்ட இலக்கத்தகடு இல்லாத சொகுசு கார் ஒன்று கடந்த ஒக்ரோபர் மாதம் 26 ஆம் திகதி மிரிஹான பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து, பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தையும் அவரது மனைவியும் கைது செய்யப்பட்டு நுகேகொடை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையில், லொஹான் ரத்வத்தை மற்றும் அவரது மனைவி ஷஷி பிரபா ரத்வத்தை ஆகியோரால் தாக்கல் செய்யப்பட்ட பிணைமனு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

# சகலரதும் நலன் கருதி ஒன்றாய் பயணிப்போம்

## ஹக்கீம் தெரிவிப்பு

நடந்து முடிந்த பொதுத் தேர்தலில், இறைவன் அருளால் கண்டி மாவட்டத்தில் எனக்கு வாக்களித்து, மீண்டும் எனது வெற்றியை உறுதி செய்ததோடு, அங்கு ஐக்கிய மக்கள் சக்தியில் முதலாவது தெரிவுக்கான விருப்பு வாக்கால் என்னை கண்ணியப்படுத்தியுமுள்ளீர்கள் என முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

தேர்தல் வெற்றியைத் தொடர்ந்து முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் விடுத்துள்ள நன்றி தெரிவிப்பில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

இந்த வெற்றிக்காக எனக்கு ஆதரவளித்த கண்டி மாவட்ட உலமாப் பெருமக்கள், ஏனைய சமயத் தலைவர்கள்,அரச மற்றும், தனியார் நிறுவன அலுவலர்கள், தாய்மார்கள், சகோதர சகோதரிகள் அதற்கும் அப்பால் பொதுவாக எனது அரசியல் செல்நெறியோடு ஒன்றித்துப் பயணிக்கின்ற சகோதர சமூகத்தவர்களான சிங்கள, தமிழ், கிறிஸ்தவ மக்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள் உரித்தாவதாக.

எனது கடந்தகால அரசியல் பணிகளிலும், என்னிலும் அசைக்க முடியாத நம்பிக்கை வைத்து கணிசமான வாக்குகளை எனது வெற்றிக்காக வழங்கியுள்ளீர்கள்.

இந்தத் தேர்தலில் எமது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அம்பாறை (திகாமடுல்ல), மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் தனித்து மரச் சின்னத்தில் போட்டியிட்டது.

இந்த இரு மாவட்டங்களிலும் வாக்களித்து நாடாளுமன்ற பிரதிநிதிகளாக ஒவ்வொருவர் வெற்றிபெறவும் ,அவற்றில் கட்சிக்கு அளிக்கப்பட்ட மொத்த வாக்குகளினூடாக தேசியப் பட்டியல் பிரதிநிதியொருவர் நியமிக்கப்படவும் வழிவகுத்து, எமது தனித்துவம் காத்த கட்சியின் வாக்காளர்கள்கள் மற்றும் ஆதரவாளர்கள் ஒவ்வொருவருக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அவ்வாறே, திருகோணமலை, புத்தளம், குருநாகல், வன்னி ஆகிய மாவட்டங்களிலும் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து அதன் தொலைபேசி சின்னத்திலும் போட்டியிட்டோம்.

அவற்றில் போட்டியிட்ட எமது கட்சி சார்ந்த வேட்பாளர்களுக்கு வெற்றி வாய்ப்பு கிட்டாவிட்டாலும் கூட, கணிசமான வாக்குககளை அளித்து அவர்களையும் வெற்றி பெறச் செய்யும் நோக்கத்துடன் வாக்களித்துள்ளீர்கள்.

மேலும், தேர்தலில் வெற்றி, தோல்வி என்பன இயல்பானவை. நமக்கு அவற்றை ஏற்றுக்கொள்ளக் கூடிய மனப் பக்குவம் தேவை. இந்த வெற்றி - தோல்விகள், தலைமைத்துவக் கட்டுக்கோப்புடன் கையாளப்பட வேண்டும்.

ஒற்றுமையுடன் அரசியல் பாதையில் தொடர்ந்தும் பயணிக்க எத்தகைய தடைகளையும், முரண்பாடுகளையும் உருவாக்கிவிடக்கூடாது என்ற புரிதலுடன்அனைவரையும்அரவணைத்துக்கொண்டு நாட்டினதும்,இங்குவாழ்கின்றசகலசமூகத்தினரினதும் நலன் கருதி ஒன்றாகப் பயணிப்போம் என்றுள்ளது.

# அதிபர் ஞாபகார்த்தமாக அஞ்சல் தலை வெளியீடு




(அபு அலா, துஷாரா)

பாவற்கொடிசேனை பாடசாலையின் ஓய்வுநிலை அதிபர் அருளம்பலம் மாணிக்கப்போடி மற்றும் அவரது மனைவி ஷ்ரீகரதேவி அருளம்பலம் ஆகியோரை நினைவுகூர்ந்து அஞ்சல்தலையொன்று அண்மையில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

இதன்போது 'அருள்ஸ்ரீ' புலமைத் திட்டத்திற்காக 2024/2025 கல்வியாண்டில் அறிவியல் பாடங்களில் சிறந்தசெயல்திறனை வெளிப்படுத்திய மாணவர்களின் பெயர்களும் அறிவிக்கப்பட்டது.

இந்த மாணவர்களுக்கான சான்றிதழ்கள் மற்றும் புலமைத் திட்டத்திற்கான உரிமம் ஆகியவற்றை அருள்ஸ்ரீ அறக்கட்டளை ஸ்தாபகர் வைத்தியர் அருளம்பலம் பிரகாஷின் சார்பில் அறக்கட்டளை மட்டக்களப்பு பிரதிநிதிகள் ஆகியோர் வழங்கி வைத்தனர்.





இந்நிகழ்வில் மட்டக்களப்பு மேற்கு கல்வி வலய கல்விப் பணிப்பாளர் எஸ்.ஜெயச்சந்திரன், பிரதிக் கல்வி பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர் மற்றும் அதிபர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 19.11.2024இல் வெளியிடப்பெற்றது